பிரத்தியட்சமாகிறது. அடையாளம் தான்! சொல்லுகிறனு, அல்லது அனுமன் ஏதோ மந்திர வித்தை காட்டுகிறனு ?

கிஷ்கிந்தா காண்டத்தில் ராமன் அனுமனிடம் சொன்ன அந்த அடையாள வார்த்தையை இப்போது நினைப்பூட்டிக் கொள்ளுங்கள் :

மல்லல்மா நகர்துறந்(து)
ஏகுநாள், மதிதொடும்
கல்வின்மா மதில்மணிக்
கடைநடந் திடுதல்முன்,
எல்லைதீர் வரியவெங்
கானம்யா தோஎனுச்
சொல்லினுள் : அஃதெலாம்
உணரநீ சொல்லுவாய்.

[மல்லல் மா நகர்—வளமான அயோத்திமா நகரம். ஏகு நாள் – காடு செல்லும் நாளில். மதி தொடும் – சந்திரமண்டலத்தை அளாவி நிற்பது போலத் தோற்றம் வாய்ந்த. கல்வின் மாமதில் மணிக்கடை – பெரிய கல்மதிவின் அழகிய வாசல். நடந்திடுதல் – கடந்து செல்வதற்கு முன்பே. எல்லை தீர்வரிய வெங்கானம் யாதோ – எல்லையில்லாத வெப்பமுடைய தென்று நீர் வருணித்தீரே அந்த வெப்பமான காடு எதுவோ, அதாவது இதுதானே.]

மூன்றும் அடையாளம்

வேறொரு அடையாள வார்த்தையையும் தெரிவித்து வேறொரு முக்கியமான காட்சியையும் நினைப்பூட்டுகிறுன் அனுமன். காட்டிலே இவர்களை விட்டுப் போகும்போது சுமந்தரன் தயங்கித் தயங்கிப் பரிதவிக்க ராமன் தேறுதல் சொன்னுனல்லவா? அந்த வசன சாதுரியம் சுமந்திரன் துயரத்தை நீக்கவில்லைதான். ஆனுல் உலகம் தெரியாத சீதை யுள்ளத்தில் துயரமே இல்லாமல் செய்து விட்டது.

அந்த நிலையில் சீதை சுமந்திரனை நோக்கி, 'நான் அரண்மனையில் அருமையாக வளர்த்து வந்த கிளிக்கும் மைனுவுக்கும் தொடர்ந்து பேச்சுக் கற்றுக் கொடுக்க வேண்டும்' என்று கவலையோடு செய்தி சொல்லியனுப்பினுள். அந்தக் காட்சி இப்போது அனுமன் வாய்மொழி மூலமாக மனக்கண் முன் வருகின்றது :

இக் காட்சி தோன்றியதும், உள்ளத்திலே எத்தனை உணர்ச்சிகளும் சிந்தனைகளும் தூண்டப் பெற்றிருக்கவேண்டும்:

எள்ளரிய தேர்தரு
சுமந்திரன் இசைப்பாய்
வள்ளல்மொழி வாசகம்
மனத்துயர் மறந்தாள்;
கிள்ளையொடு பூவைகள்
கிளர்த்தல் கிளஎன்றும்
பிள்ளையொடு தன்திறம்
உணர்த்துதி பெயர்த்தும்.

[எள்ளரிய – இகழ்வதற்கு அருமையான; ஒரு குற்றமும் இல்லாத. தேர்தரு சுமந்திரன் – தேரோட்டுகிற சுமந்திரனை. இசைப்பாய் – சொல்லுவாய். வள்ளல் மொழி – ராமன் கூறிய தேறுதல் வார்த்தைகளால். கிள்ளையொடு பூவைகள் – நான் வளர்த்த கிளிகளையும் மைனுக்களையும். கிளர்த்தல் –வளர்க்க வேண்டிய வகையையும். கிள – சொல்வாய். என்னும் – என்று அயோத்தியிலுள்ள ஊர்மிளை முதலான சகோதரிகளுக்கு வனத்திலிருந்து சுமந்திரனிடம் செய்தி சொல்லியனுப்பின. பிள்ளையொடு–குழந்தைக் குணமுடைய சீதையோடு. தன் திறம்— அவள் இவ்வாறு செய்தி சொன்ன தன்மையை. உணர்த்துதி — அவளுக்கு அடையாளமாகச் சொல்வாய். பெயர்த்தும்— மீண்டும்.]

இந்தச் சந்தர்ப்பத்திலே, அயோத்தியாகாண்டத்திலே சுமந்திரனை அனுப்பியபொழுது சீதை சொன்ன அந்த வாக்கை நினைப்பூட்டிக் கொள்ளலாம் :


அன்னவள் கூறுவாள் :
'அரசற்(கு) அத்தையர்க்(கு)
என்னுடை வணக்கம்முன்
இயம்பி, யானுடைப்
பொன்னிறப் பூவையும்
கிளியும் போற்றுகென்(று)
உன்னும்என் தங்கையர்க்(கு)
உணர்த்துவாய்!' என்றுள்.

[உன்னும் – என்னை நினைத்துக் கொண்டிருக்கும்.]

அனுமன் சொன்ன மூன்று வார்த்தைகளும் மூன்று மகா மந்திரங்களாகச் சீதை யுள்ளத்தைச் செம்மைப் படுத்துகின்றன.

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூளாமணியும்



11. ஏழு ஆனந்த உபமானங்கள்

பி.ஸ்ரீ


அநுமன் சொன்ன அடையாள வார்த்தைகளைச் சீதை கேட்டுக் கொண்டிருந்தாளென்றால் போதாது; அமுதமாகப் பருகிக்கொண்டிருந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

வேறு அடையாளங்களையும் ராமன் சொல்லி யனுப்பி யிருந்தான். ஆனால் 'இனிமேல் சொற்கள் தேவையில்லை' என்று தீர்மானித்து விடுகிறான் சொல்லின் செல்வன்.

'மீட்டும் உரை வேண்டுவன இல்லை' என்று தனக்குள் தானே சொல்லிக் கொள்கிறான். ஆம்; செல்வத்தை வீணாக வாரி இறைத்துக் கொண்டே யிருப்பவரா செல்வர்?

செட்டாகச் செலவு செய்யவும் தெரிய வேண்டும்: அப்படியானால் தானே செல்வத்தை அறவழியில் பயன்படுத்திக் கொண்டே யிருக்க முடியும்?

'செல்வம்போல் செலவழிந்து போய் விடுமா சொற்செல்வம்?' என்று கேட்கலாம். சொற்செட்டு இல்லையென்றால் சொற்செல்வம் பயனளிக்காமலே போய் விடும். எனவேபொருட் செல்வத்தைக் காட்டிலும் சொற் செல்வத்திற்குச் செட்டு அவசியம் என்று கூடக் கருதலாம்.



எவ்வளவோ மலிவான சரக்காக இருக்கிறதே புத்திமதி இந்த நாளில்; அதை வாரி வாரி வழங்கவும் செய்கிறோமே: இதனால் விசேஷ நற்பயன் விளைந்து விடுகிறதென்று சொல்ல முடியுமா? சொல்லின் செல்வரின் சொற்களோ ராமபாணம்போல் குறி தவறாது காரியசித்தி பெறுகின்றன.

அவசியமில்லாத அதிக வார்த்தைகள் செயல் – திறனைக் கெடுத்து விடும். செயல்-வீரம் என்னும் செல்வமும் அநுமன் உடைமையல்லவா? செயல்-வீரரிடம் சொற்செட்டு மட்டுமல்ல மௌனமும் அவசியமான போதெல்லாம் காணப்படும்.

சரியான சந்தர்ப்பத்தில் சரியான வார்த்தை பேசி விட்டு மௌனமாகி விடுவார்கள்; செயலைக் கொண்டே சொற்பொழிவைப் பூர்த்தி செய்து விடுவார்கள். "இன்னும் கொஞ்சம் பேசமாட்டாரா?" என்று நாம் ஆவலாயிருக்கும் போதே பேச்சு நின்று விடும். சொல்லின் செல்வரின் நிலை இது:

கணையாழி காட்டியது

இந்த விஷயங்களை மனத்தில் வைத்துக் கொண்டு அனுமனுடைய இந்த அடையாளப் பேச்சு எப்படி முற்றுப் பெறுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும்:

மீட்டும்உரை வேண்டுவன'
இல்லையென, 'மெய்ப்பேர்

தீட்டியது ; தீட்டரிய
செய்கையது, செவ்வே

நீட்டி(து)'என நேர்ந்தனன்,
என்று,நெடிய கையால்

காட்டினன் ஓராழி;அது
வாள்நுதலி கண்டாள்.

[மீட்டும்—மீண்டும் மீண்டும்; மேலும் மேலும். உரைவேண்டுவன இல்லை என—உரைத்துக் கொண்டேயிருக்க வேண்டிய அவசியமான வார்த்தைகள் இனிமேல் தேவையில்லை யென்று. மெய்ப்பேர் தீட்டியது — ராமனது உண்மையான பெயர் எழுதப் பெற்றிருப்பதும். தீட்டரிய செய்கையது — சித்திரித்துக் காட்டவும் இயலாத வேலைத் திறமுடையதுமாகிய. செவ்வே நீட்டு இது—இந்த மோதிரத்தை நேராகச் சீதையிடம் நீட்டுவாய். என நேர்ந்தனன்—என்று சொல்லி ராமன் என்னிடம் இம்மோதிரத்தைக் கொடுத்தான். என்று—என்று அனுமன் சீதையிடம் சொல்லி. நெடிய கையால் — தனது நீண்ட கைகளால். காட்டினன் ஓர் ஆழி—ஒரு வட்ட வடிவமான மோதிரத்தை எடுத்துக் காண்பித்தான். அது வாள் நுதலி கண்டாள்—அம்மோதிரத்தைச் சீதை பார்த்தாள். வாள் நுதலி—ஒளி பொருந்திய நெற்றியையுடையவள்.]

எத்தனை அடையாள மொழிகளை எவ்வளவு வாக்கு வன்மையாய் உரைத்துக் காட்டிக் கொண்டேயிருந்தாலும் கணையாழி என்னும் இந்தச் சிறந்த அடையாளத்தைக் காட்டுவதற்கு ஈடாகுமா? ராமநாமம் சொல்லிச் சீதையின் அவநம்பிக்கையைப்போக்க ஆரம்பித்தவன், அதே 'மெய்ப் பெயர்' தீட்டிய 'நாம மோதிர'த்தைச் சீதைக்குக் காட்டி முழு நம்பிக்கையும் விளைக்கிறான்.

இந்தச் சந்தர்ப்பத்திலே, பெரியாழ்வார் திருமொழி'யிலே வரும் ஒரு பாசுரத்தை நினைப்பூட்டிக் கொள்ளலாம்:

மைத்தகுமா மலர்க்குழலாய்
வைதேவி, விண்ணப்பம் :

ஒத்தபுகழ் வானரக்கோன்
உடனிருந்து நினைந்ததோட,

அத்தகுசீர் அயோத்தியர்கோன்
அடையாளம் இவை
மொழிந்தான் ;

இத்தகையால் அடையாளம்
ஈதவன்கை மோதிரமே.

[மைத்தகு மாமலர்க் குழலாய்—மலர் சூடிய (இங்கே, சூடுவதற்கு உரிய) கூந்தலையுடையவளே. வைதேவி —வைதேகியே; விதேக ராஜாவாகிய ஜனகனது புதல்வியே. வானரக் கோன் — சுக்கிரீவன். அத்தகு சீர் அயோத்தியர்கோன்—ராமபிரான்.]

அனுமன் ராமபிரானைக் குறித்த பழைய வரலாறுகளை யெல்லாம் சொல்லிச் சீதைக்குத் தன்மீது நம்பிக்கை உண்டாக்கிக் கொள்ள முயன்றான் என்று ஆதி காவியத்திலே வால்மீகி முனிவர் போகும் அந்த வழியை விட்டு விட்டு, இக்கவிஞர் இங்கே ஆழ்வார் காட்டிய வழியைப் பின்பற்றுகிறார். வால்மீகி கவிக் கண்ணால் கண்டது போல் ஆழ்வாரும் அகக்கண்ணாலும் கவிக் கண்ணாலும் கண்ட கதைதானே ?


கம்பனும் கண்டவன் தான். 'நானும் அறியேன் ; அவளும் பொய் சொல்லாள்' என்று கம்பனே கூறியதாக வழங்குகிறது ஒரு கதைத் துணுக்கு. கம்பனுக்கு நாமகள் காட்டி விளக்கம் கூறியது,இந்தச் சந்தர்ப்பத்திலே பெரியாழ்வாரின் காட்சியை ஒருவாறு ஒத்துப் போவதாய்க் கருதலாம்.

இனி, சீதை கணையாழியை எப்படிக் கண்ணுற்று அனுபவிக்கிறாள் என்பதைப் பார்ப்போம். அடையாள வார்த்தைகளை அனுமன் சொல்லிக் கொண்டிருக்கும் போது, அந்தச் சொல்லின் திரையோடு காலத்திரையும் விலகி மூன்று ஜாலக் காட்சிகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சீதைக்குக் காட்டியதல்லவா ? இப்போது இவள் ஓர் இந்திர ஜாலமும் காண்கின்றாள்.

எந்தப் பெயர் கொஞ்ச நேரத்திற்கு முன் காதில் விழுந்ததோ அது இப்போது கண் முன்னும் வந்துவிடுகிறது. எந்தப் பெயரைக் கேட்டதும் உணர்வு நீராய் உருகிப்போயிற்றோ, அதே திருப் பெயரைக் கண்முன் சித்திரித்துக் காட்டப் பெறுகின்றாள்.

அந்த வேலைப்பாடுதான் எவ்வளவு விசித்திரமானது! யாரே செய்யமுடியும் அதைப் போல? அந்த வேலைத்தி த்தை வருணிக்கத் தான் முடியுமா?

சொல்லின் செல்வன் 'அத்தகைய கணையாழியை உன்னிடம் கொடுக்கும்படி உன் காதலன் தந்திருக்கிறான்' என்று பொருள்படத்தான் சொல்லுகிறான். எனினும், ஒரு தெய்வத்தின் முன் நிவேதனமாக ஓர் அபூர்வமான பொருளைச் சமர்ப்பிப்பது போல், தன் இரு கைகளாலும் மோதிரத்தை ஏந்திக் கொண்டு காண்பிக்கிறான். இத்தகைய பண்பாடும் இவனுக்கு ஒரு செல்வம்.



கணையாழி கண்ட சீதை

கணையாழியைக் கண்டதும் சீதை முகத்தில் ஒரு புதிய ஒளி பரவுகிறது:

கணையாழி கண்ட சீதையின் குதூகலத்தைப் பாடுகின்ற கவிதையின் குதூகலத்தைத்தான் பாருங்கள்:

இறந்தவர் பிறந்தபயன்
எய்தினர் கொல்என்கோ?
மறந்தவர் அறிந்(து)உணர்வு
வந்தனர் கொல்என்கோ?
துறந்தஉயிர் வந்(து)இடை
தொடர்ந்தது கொல் என்கோ?
திறம்தெரிவ(து) என்னை
கொல்இ(ந்)
நன்னுதலி செய்கை?

[எய்தினர் கொல் என்கோ — அடைந்து விட்டார்கள் என்பேனே. இடை - உடம்பினிடையே; உடம்பினிடத்தே. தொடர்ந்தது — தொடர்புற்றது. திறம் — தன்மை; (இங்கே) மகிழ்ச்சியின் தன்மை. தெரிவது — தெரிந்து



கொள்வது. என்னை சொல் — எவ்வாறோ. நன்னுதலி — அழகிய நெற்றியையுடைய சீதை.]

கணையாழியைக் கண்டதுமே புதிய ஒளி பரவியது சீதையின் நெற்றியிலே, முகத்திலே. இப்போது ஒரு புதிய அழகும் வந்து விடுகிறதாம் இந்த ஞான சுந்தரிக்கு.

பிறந்தவர்கள் பிறவிப் பயனைப் பெற வேண்டுமல்லவா? இம்மையின்பத்தையும், இப்பதம் கடந்தால் மறுமையின்பத்தையும் அடைய இம்மையிலேயே முயல வேண்டுமல்லவா?

இப்பெரும் பயனை அடைய முயலாமல் வாழ்வை வீணாக்கி இறந்து போகிறவர்களும் உண்டல்லவா? அப்படி இறந்தவர்கள் பிறவிப் பயனை மறுமையில் எதிர்பாராமல் தானே இருப்பார்கள்? அந்த நிலையில் அவர்கள் பிறவிப் பெரும் பயனைத் தற்செயலாக அடையப் பெற்றார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

'அத்தகைய மகிழ்ச்சி சீதையின் மகிழ்ச்சியோடு ஒப்பிடலாம் என்பேனோ?' என்று கவிஞன் தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறான்.

வேறொரு உவமை. ஒருவர் அறிதற்கு அரிய ஒரு பெரும் பொருளை அறிந்து விட்டார். ஐயோ, பின்பு மறந்தும் விட்டார். அவர் எத்தகைய கவலையென்னும் நரகத்தில் உழன்று கொண்டிருப்பார்! அவரே திரும்ப அந்த அரும் பெரும் பொருளைப் பற்றி அறிவு வரப் பெற்றாராயின், அந்த அறிஞர் 'நரகமே சுவர்க்கமாகும்' என்பது போன்ற ஆனந்தத்தை அடையக் கூடுமல்லவா?

'அந்த ஆனந்தத்தைச் சீதையும் அடைந்தாள் என்பேனோ?' என்று அதிசயிக்கிறான் கவிஞன்.

இந்த உவமையாலும் திருப்தி ஏற்படவில்லை, வேறொரு உவமையை நாடுகிறது கவியுள்ளம். 'உடலைத் துறந்து விட்டது உயிர்; அழுதால் மீளுமா, தொழுதால் மீளுமா? அந்த உயிர் மீண்டு வந்து அந்த உடலுடன் உறவு கொண்டது என்றால் அத்தகைய உவகையைச் சீதையும் அடைந்தாள் என்பேனோ?

இப்படி ஆனந்த அலைகளால் மொத்துண்டு கிடக்கும் கவியுள்ளத்திலே நான்கு பகற் கனவுகள் தோன்றுகின்றன.

இழந்தமணி புற்றர(வு)எ—
திர்ந்த தெனலானாள்;
பழந்தனம் இழந்தன
படைத்தவரை ஒத்தாள்;
குழந்தையை உயிர்த்தமல—
டிக்குவமை கொண்டாள்;
உழந்துவிழி பெற்றதொர்
உயிர்ப்பொறையும் ஒத்தாள்

[மணி — (இங்கே) நாகரத்தினம். புற்றரவு — புற்றில் உள்ள பாம்பு. எதிர்ந்தது – சந்தித்தது. உழந்து — வருந்தி. உயிர்ப்பொறை — உடம்பு.]

நாகரத்தினத்தைப் பறி கொடுத்த நாகம் தேடித் தவிக்கிறதாம். 'கண்டு பிடிக்க முடியவில்லையே' என்று ஏங்கிப் புற்றுக்குத் திரும்பி விடுகிறதாம். ஆனால் — என்ன அதிசயம்! — நாகம் இழந்த ரத்தினத்தை அந்தப் புற்றிலேயே கண்டுவிடுகிறதாம்.

வேறொரு கனவு. ஒரு பெருஞ் செல்வர். நீண்ட காலமாகத் தாம் அனுபவித்து வந்த பெருஞ் செல்வத்தை இழந்துவிடுகிறார். 'போனது போனது தான். ஐயோ இனி நாம் அந்த ஐசுவரியத்தைக் கனவிலும் காண முடியுமா?' என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார். இப்படியிருக்கும் போது திடீரென்று ஒரு நாள் அதிர்ஷ்ட தேவதைகாட்டும் செப்படி வித்தையால் அந்தச் செல்வங்களையெல்லாம் திரும்பப் பெற்று விடுகிறார்!

இன்னொரு கனவு. வெகு காலமாகக் குழந்தை இல்லை ஒருத்திக்கு, வயது ஏற ஏறக் குழந்தை ஆசை அதிகப்படுகிறது, நம்பிக்கையோ குறைந்து வருகிறது.


அந்த அம்மாளை ஊரார் 'மலடி' என்றே பிரசித்தமாய்க் குறித்துப் பேசுவது வழக்கமாகி விட்டது. அதே ஊரில் ஒரு நாளுமில்லாத திருநாள் வந்து விட்டது போல் தூள்படுகிறது—'மலடி குழந்தை பெற்று விட்டாள்' என்று தான்.

நான்காவது கனவு. ஒருவன் இரண்டு கண்களையும் இழந்து விட்டான். சூரிய ஒளியும் இயற்கை யழகுகளும் வர்ண ஜாலங்களும் பழைய நினைவுகளாகி விட்டன. பிறவிக் குருடனாயிருந்தாலும் இவ்வளவு கஷ்டம் தெரியாதே; அப்படிப் பட்டவன் ஒரு நாள் 'ஓஹோ, இரண்டு கண்களும் மீண்டும் நன்றாய்த் தெரிகின்றனவே!' என்று ஆனந்தப் படுகிறான்.

இத்தகைய எல்லையற்ற ஆனந்தங்களின் சேர்த்தி சீதையின் ஆனந்தம் என்பதாக அந்த ஆனந்தத்தை அப்படியே நமக்குப் பிரத்தியட்சப்படுத்துகிறான் கவிஞன்.

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூளாமணியும்



பி.ஸ்ரீ

12. "வாழி மணி ஆழி!"

அனுமன் கையிலிருந்து சீதை கைக்கு வந்து விடுகிறது கணையாழி. ஏந்திய கைகளிலிருந்து வாங்கிக் கொள்கிறாள். எவ்வளவு ஆசையோடு!

மந்திர மோதிரமா?

அந்த ஆசை படுத்துகிற பாட்டைப் பாட்டேதான் பாடிக் காட்ட முடியும். வசனம் சொல்லிவிட முடியுமா?

'இது இன்னதெனல் ஆமே?' — அதாவது சீதை இப்போது அடைந்திருக்கும் இந்த நிலைமையை இப்படிப் பட்டதென்று சொல்வதற்கு ஆகுமோ என்று கம்பனே சொல்லுகிறானே!

எனினும் கவிவாணி பாடுகிறாள்; பாடிச் சீதையை அப்படியே காட்டி விடுகிறாள்;

வாங்கினள்; முலைக்குவையில்
வைத்தனள்: சிரத்தால்
தாங்கினள்; மலர்க்கண்மிசை
ஒத்தினள்; தடந்தோள்
வீங்கினள்; மெலிந்தனள்;
குளிர்ந்தனள்; வெதுப்போ(டு)
ஏங்கினள்; உயிர்த்தனள்: இ(து)
இன்னதென லாமே?

[முலைக்குவையில் — ஸ்தனங்களின் முகட்டில். மலர்க்கண்மிசை — பூக்களை ஒத்த கண்களில். தடந்தோள் — விசாலமான தோள். வீங்கினள்-பூரிக்கப் பெற்றாள். வெதுப்பு – வெப்பம். உயிர்த்தனள் – பெருமூச்சு விட்டாள். ஆமே — (இங்கே) ஆகுமோ. இது — ஸ்தம்பித்துச் செயலற்றிருக்கும் இந்த ஆனந்த நிலை.]

கணையாழியை வாங்கிக் கொண்டதும் எவ்வளவு காதலுடன் தன் ஹிருதயத்தோடு அணைத்துக் கொள்கிறாள்! கன்னி மாடத்திலே தன்னைக் கண்டு காதலித்து அந்தக் காதலால் வில்லிறுத்து மணம் புரிந்து கொண்ட அந்த மங்கள வைபவம் அப்படியே நினைவுக்கு வந்து விடுகிறதா?

மார்போடு அணைத்துக் கொண்டவள், பிறகு கணையாழியைத் தலைமேல் ஏந்திக் கொள்கிறாள். இழந்த மணிமுடி கிடைத்து விட்டதென்றே எண்ணி விடுகிறாளா?

நீல மலர் போன்ற தன் அழகிய, குற்றமற்ற கண்களிலே ஒத்திக்கொள்கிறாள். அநுக்கிரகத்தோடு வந்திருக்கும் மகா பிரசாதம் தானே?

எத்தகைய மந்திர சக்திதான் பொதிந்திருக்கிறதோ இந்த மோதிரத்திலே! தோள்கள் பூரிக்கின்றன; மறுபடியும் மெலிந்து போகிறாள்.

ஏன் இப்படி? ராமனைக் காட்டிக் காட்டி மறைக்கிறதா, மந்திர மோதிரம்?

ஒரு கணம் உள்ளம் குளிர்ந்து உடம்பு நேராகிறது. மறு கணமே உடல் வெதும்பி ஏங்கிப் போகிறாளாம். ஆ, இப்படி ஏன் பெருமூச்சு விடுகிறாள் இப்போது?



நாம் கவிஞனிடம் விளக்கம் கேட்பதற்குள் அவனை நம்மிடத்தில், 'சீதையின் இந்த நிலையை இன்னதென்று சொல்வது எப்படி?' என்று ஆலோசனை கேட்பது போல் அல்லவா தோன்றுகிறது?

"இது இன்ன தெனலாமோ?" என்று நாமும் திகைத்துக் கொண்டிருக்கும் போதே கவிஞன் மீண்டும் நம்மைக் கவனிக்கச் சொல்லுகிறான்:

மோக்கும் : முலை வைத்துற
முயங்கும்; ஒளிர் நன்னீர்

நீக்கிநிறை கண் இணை
ததும்ப, நெடு நீளம்

நோக்கும்; நுவ லக்கருதும் :
ஒன்றும் நுவல் கில்லாள் :

மேக்குநிமிர் விம்மலள் : வி-
ழுங்கலுறு கின்றாள்.

[மோக்கும் — மோந்து பார்ப்பாள். உற — நன்றாக. முயங்கும் - தழுவுவாள், நன்னீர் - (நல் + நீர்) (இங்கே) ஆனந்தக் கண்ணீர். இணை — இரட்டை. நுவல - பேச. மேக்கு — மேல். விம்மல் - அழுகை; (இங்கே) உள்ளப் பூரிப்பினால் தோன்றும் அழுகை. உறுகின்றாள் - தொடங்குகிறாள்.]

கணையாழியை மோந்து பார்க்கிறாளாம், பூச்செண்டாகி விட்டதா? மறுபடியும் மார்போடு அணைத்துத் தழுவிக் கொள்கிறாள்.

இன்னும் ஆசை தீரப் பார்க்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால் கண்ணீர் வந்து திரையிடுகிறது. இந்த ஆனந்தக் கண்ணீரும் இந்தக் கண்களுக்கு ஒரு புதிய எழிலையும் ஒளியையும் தருகிறது.

கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள்; மீண்டும் கண்ணீர் நிறைந்து ததும்புகிறது. ஆ, இந்தப் பார்வைதான் எவ்வளவு நெடு நீளமான பார்வை!

எத்தனை நீண்ட நினைவுகள் இப் பார்வையில் மிதக்கின்றன? இந்தக் கவிதையும் அப்படி அந்த விழியிலே மிதந்து மொழியிலே வந்தது போலக் காண்கிறது.

கணையாழியுடன் ஏதேதோ கொஞ்சிப் பேச விரும்புகிறாளாம். ஆனால் பேச்சொன்றும் வரவில்லை. அவ்வளவு இதய நிறைவு.

மேலும் மேலும் விம்மலோடு அழுகை தான் வருகிறது. இதற்கு மேல் ஒரு பேச்சாவது பாஷையாவது உண்டா?

அமிதமான மகிழ்ச்சிக்கும் அழுகைக்கும் தான் என்ன நட்பு! வந்த அழுகையை அடக்கி விழுங்கத் தொடங்குகிறாளாம்.

எவ்வளவு ஒருமையுள்ளத்தோடு அதே தியானமாக இந்த மணியாழியோடு லயித்துப் போகிறாள்!

மூன்று தியானக் கதவுகள் திறந்த. அமுதக் கனவு, விருந்துக் கனவு, மருந்துக் கனவு என்று முக்கனவுகள் காட்டுகின்றன. முதலாவது: உணவு தேடிப் போகவும் சக்தி யில்லாமல் இருந்த இடத்திலேயே இருந்து பசித் தீயால் தகிக்கப் படுவோரின் ஒரு கூட்டம்.

அந்தக் கடும் பசியருக்குக் கூழ் கிடைத்தாலும் அமுதம் தான். ஆனால் பாலுணவே கிடைத்து விடுகிறதாம். அப்பாலமுதத்தைத் தேவாமிர்தமாக உண்டனரென்று சொல்லவும் வேண்டுமா?

இந்தக் காட்சி மறைந்து, அறப்பற்றுள்ள வள்ளற் பெரு மக்கள் தோற்ற மளிக்கிறார்கள். அண்ணல் சடையனைப் போன்ற வள்ளல்கள்.

இந்த வள்ளல்களை நோக்கி வருகிறார்கள் விருந்தாளிகள், விருந்தாளி முகம் கண்டதுமே வள்ளல் முகம் எப்படி மலர்கிறது! எவ்வளவு அக மகிழ்ச்சியை

யும் அன்பையும் முகமலர்ச்சி பிரதி பலிக்கிறது!

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு தியானக் கனவு. கணையாழி கணையாழியாகவும் தோன்ற வில்லையே! செத்துக கொண்டிருக்கும் உயிரை மீட்டுத் தரும் சஞ்சீவி மருந்தை யல்லவா அனுமன் கொண்டு வந்து விட்டான்?

இப்படிச் சீதைக்குப் பிராணபாயம் தவிர்த்துப் பேருவகை விளக்கின்ற மணியாழியைப் பாருங்கள் :

இருந்துபசி யால்இடர்
உழந்தவர்கள் எய்தும்

அருந்தும் அமுதாகிய(து):
அறத்தவரை அண்மும்

விருந்தும்என லாகியது ;
வியும்உயிர் மீளும்

மருந்தும்என லாகியது :
வாழிமணி ஆழி!

[இடர் உழந்தவர்கள்—துன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தவர்கள். எய்தும்—அடையப் பெற்ற. அருந்தும்—உண்ணுதற்கு ஏற்ற. அமுது—அமிர்தம் போன்ற பால். அறத்தவர் — தருமவான்கள். அண்மும்—அடுத்து வரும். விருந்த—விருந்தாளி. வீயும்—செத்துப் போகும். மருந்த—சஞ்சீவி. மணி ஆழி—அழகிய கணையாழி.]

'இப்படிப்பட்ட இந்திர ஜால மகேந்திர ஜாலங்களை யெல்லாம் சீதைக்குக் காட்டி இவளை வாழ்வித்து உலகத்தை வாழ்விக்கப் போகும் கணையாழி வாழ்வதாக! கால தத்துவம் உள்ள அளவும் வாழ்வதாக இம் மணியாழி!' என்று வாழ்த்துகிறது கவியுள்ளம்.

வால்மீகத்திலே,
கணையாழி கொடுத்தல்

அனுமன் சீதையை நோக்கி, 'அம்மா, அளவற்ற பாக்கியசாலியே, ராமபிரானது திருப்பெயரால் அலங்கரிக்கப்பெற்ற இக் கணையாழியைப் பாருங்கள். தங்களுக்கு நம்பிக்கை உண்டாகும் பொருட்டு இதை ராமபிரான் என்னிடம் ஒப்புவித்துக்கொடுக்கச் சொன்னார். தங்களுக்குச் சகல மங்களங்களும் உண்டாகட்டும்!' என்று அம் மோதிரத்தைக் கொடுப்பதாக வால்மீகி தெரிவிக்கிறார்.

சீதை கணையாழியை வாங்கிப் பார்த்துக் கணவனைக் கண்டவளைப் போல் அளவற்ற மகிழ்ச்சி யடைகிறாள். பார்த்துப் பார்த்து ஆசை தீராமல் அக் கணை



டாழியிலிருந்து கைகளை எடுக்க முடிய வில்லை. பிறகு தன் கணவனின் பிரிய தூதனை நோக்கி மகிழ்வெய்துகின்றாள்.

தன்னை மணந்த காலத்தில் ராமன் கையில் அணிந்திருந்த அம்மோதிரத் தைக் கண்டதும் அந்தத் திருமண விழாவும், அதற்குப் பிறகு அவனுடன் வாழ்ந்த இன்ப வாழ்க்கையும் நினை விற்கு வருகின்றன. அந்த வாழ்க்கையி லிருந்து ஒரு காட்சியும் சீதையின் நினைவிற்கு வருகிறது.

ஒருசமயம் இருவரும்வேடிக்கையாய்க் கோபித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவரோடொருவர் பேசவு மில்லை; ஒருவரை ஒருவர் பார்க்கவுமில்லை. அப் போது ராமன் தன் மோதிரத்தை மெல் லக் கழற்றி, தற்செயலாய் நழுவியது போல் கீழே போட்டான். சீதை அதை எடுத்துக் கொடுத்தாள், 'மோதிரம் கழன்று கீழே விழுந்து விட்டதே!' என்று சொல்லிக் கொண்டே. உடனே கலகம் தீர்ந்தது; அவர்கள் கலகலப் பாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"அப்படிப்பட்ட மோதிர மல்லவா!" என்று நினைக்கிறாளாம் சீதை. 'நெடு நாளாய்ப் பிரிந்திருந்தவர்களைச் சேர் த்து வைத்த மோதிர மல்லவா?' என்றும் எண்ணமிடுகிறாளாம்

அந்த மோதிரம் தன்னை அணிந் திருந்த விரலை நினைப்பூட்டுவதுடன் முறையே கையையும் தோள்களையும் திருமேனியையும் எதிரே வந்து நிற்பது போல நினைப்பூட்டி விடுகிறதாம். அந்த உருவெளித் தோற்றத்தைச் சீதை தழுவுகிறாள்.

சிவந்து நீண்டு மகிழ்ச்சியால் மலர்ந்த கண்களோடு கூடிய சீதையின் முகம் இப்போது கிரகணம் விட்ட சந்திர மண்டலம் போலப் பிரகாசிக்கிறது என்று வால்மீகியின் ஞானக் கண் சீதா தேவியைக் கண்டு காட்டுகிறது.

பிறகு, 'ஐயோ! இவனை நமக்குப் பிராணதானம் செய்தவனென்று கொண்டாடாமல் ராவணன் என்று சந்தேகித்தோமே!' என்ற வெட்கம் உண்டாகிறது சீதைக்கு. அப்பால் 'வானர சிரேஷ்டா!' என்று அனுமனை அழைக்கிறாள்.

அழைத்து, 'நீ ஒண்டியாய் அலட்சிய மாய் இந்த ராட்சஸ ராஜதானிக்கு வந்தாயே: உன் பலத்தையும் பராக்ர மத்தையும் புத்தியையும் என்னவென்று சொல்வேன்!' என்றெல்லாம் உரை யாடத் தொடங்குகிறாள்.

இரு வேறு கவிச் சித்திரங்கள்

'கணையாழி கொடுத்தல்' என்பது கம்பனின் ஒரு சித்திரமாகவும், வால்மீ கத்தில் வேறொரு சித்திரமாகவும் காணப்படுகிறது என்பதை வாசகர்கள் இப்போது நன்குணர்வார்கள். கம்ப னுடைய கவித் திறனும் கலைத் திறனும் கம்ப சித்திரத்தை இம்மகா கவிக்கே உரிய ஓர் அற்புதமாகச் செய்திருக்கின் றன அல்லவா?

வால்மீகத்திலே இப்பகுதியை ரஸிகர் கள், 'இது பிரும்ம சிருஷ்டி; இக் கலா சிருஷ்டி அவ்வளவு இயற்கையாக அமைந்திருக்கிறது!' என்று பாராட்டக் கூடும். அப்படியானால் இதே கம்ப சித்திரத்தை 'அயன் படைப்பு என்ற அந்த அசலுக்கு நகல்' என்று சொல் லவே முடியாதல்லவா?

'அயன் படைப்பிற்கும் ஒரு திருத் தம்!' என்பர் ரஸிகர்கள்.

அயன் படைப்பினையும்—திருத்தி அழகு செய்திடுவோன்

என்று கம்பனைக் குறித்துக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பாடியிருப்பது இப்படி எத்தனையோ கட்டங்களை அனுபவித்துத் தானே?

* * *


'கணையாழி கொடுத்தல்தான் கம்ப ராமாயணத்தில் காணப்படுகிறதா?' என்று கேட்டார் ஒரு கம்ப ரஸிகர் ஒரு சமயம். கேள்வி கொஞ்சம் வேடிக்கை யானதுதான். எனினும் கொஞ்சம் ஆலோசனைக்கும் உரியதுதான்.

அனுமன் 'நெடிய கையால் காட்டி னன் ஓர் ஆழி' என்றுதான் கம்பன் கூறுகிறான். அனுமன் தன் கையால் கொடுத்ததாகச் சொல்லவே யில்லை. அனுமன் கையிலே அந்தக் கணை யாழியைக் கண்ட சீதையின் நிலையை இரண்டு பாடல்களில் ஏழு உபமானங்க ளால் வருணித்துவிட்டு, 'வாங்கினள்' என்கிறான் கவிஞன்.

அனுமன் இரண்டு கைகளாலும் கணை யாழியை ஒரு தெய்வத்தின் முன் நிவே தனப் பொருள் போல் ஏந்தி நிற்க, அந்தத் தெய்வம் தன் கையை அனுமன் கைக்கு மேலே கொண்டு வந்து அப் படியே எடுத்துக் கொண்டது போல் சீதை வாங்கிக் கொண்டாள் என்று கருதுவது கம்ப சித்திரத்திற்குப் பொருத்தமுடையதே.

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூளாமணியும்



பி.ஸ்ரீ

13. கோபுரத்திலே பொற்கலசம்

முத்து முத்தாக உதிர்கின்றது ஆனந்தக் கண்ணீர் — கடற் காற்றிலே அமுத நீர்த் திவலைகள் உதிர்வது போல.

கண்ணீருக்கிடையே, உள்ளுக்குள்ளே கொந்தளிக்கும் பெரு மகிழ்ச்சியின் சிற்றலையொன்று புறப்படுகிறது புன் சிரிப்பாக,— முத்துப் போன்ற பற்கள் சிறிது வெளித் தோன்றுமாறு.

உள்ளத்திலிருந்து அரும்பிய இள நகைதானா? உயர்த்தி ஓங்கி ஒளிர, அங்கிருந்து சுடரும் முத்துச் சுடர்நகையன்றோ இப்போது சீதை திருமுகத்தை அணி செய்வது?

அப்போது கணையாழியுடன் பேச விரும்பினாள்; பேச்சொன்றும் வரவில்லை:

நோக்கும்; நுவலக்கருதும்;
ஒன்றும் நுவல்கில்லாள்.

இப்போது அனுமனுடன் பேச விரும்புகிறாள். முன்பிருந்த பேச்சுத் தடை ஒருவாறு நீங்குகிறது.

குழந்தையின் மழலை மென்மொழி போல் சொற்கள் மிருதுவாய்க் குழறி வருகின்றன. 'ப்ராணோபகாரிந் !' என்று அகங்குளிர வாய் குளிர அனுமனை அழைக்க விரும்புகிறாள்.

'புருஷோத்தமனே !' என்றும் அருமையாக அழைக்க ஆசைப் படுகிறது உள்ளம். ஆனால் வார்த்தைகள் சரியாக வெளிப்பட வேண்டாமா?

'உயிர் தந்தாய், உத்தம !' என்னும் சொற்கள் எப்படியோ தட்டித் தடுமாறி வருகின்றன. வந்து நம் காதிலும் விழுகின்றன.

சத்தம் செய்யாமல் கேளுங்கள், பாருங்கள்:

இந்நகையள் ஆகி, உயிர்
ஏமுற விளங்கும்
முத்தநகை யாள், விழியின்
ஆலிமுலை முன்றில்
தத்திஉக, மென்குதலை
தள்ள, 'உயிர் தந்தாய்
உத்தம !' என இனைய
வாசகம் உரைத்தாள்.

[இத்தகையள் — இப்படிப்பட்ட தன்மையுடையவள் ஏமுற — (அளவற்ற) இன்பம் அடைய. முத்த நகையாள்—முத்துப் போல் பற்கள் சிறிது வெளிப்பட்ட புன்னகை பூத்த சீதை. விழியின் ஆலி - (ஆனந்தக்) கண்ணீர்த் துளிகள். முலை முன்றில் — ஸ்தனங்களின் மேல்முகடு. தத்தி உக — பாய்ந்து உதிர. மென்குதலை — மென்மையான மழலைச் சொற்கள். தள்ள — தடுமாறி வர; குழறி வர. என—என்று. இனைய — இப்படிப்பட்ட.]

'நீ மோதிரத்தையா கொடுத்தாய்? என் உயிரையே கொடுத்திருக்கிறாய்!' என்ற வாசகம் தங்க ஏட்டிலே இரத்தின எழுத்துக்களில் பொறிக்கப் பெற்றது போல் பொறிக்கப் பெற்றிருக்கிறது இந்தப் பாட்டினிடையே.

வழியும் கண்ணீருடனும் சற்றுப் புன்னகையுடனும் சீதை குழறிப் பேசிய மணிவாசகம் என்றும் அழியாத அற்புதக் கவிச் சித்திரம் பெற்று விட்டது.

நன்றியும் உள்ளன்பும்

இனி உயிர் தந்த உத்தமனுக்கு நன்றி செலுத்தத் துடிக்கிறது உள்ளன்பு.

'தக்க சமயத்தில் வந்து காப்பாற்றிய இந்த உபகாரத்திற்கு அரக்கர் சிறையிருக்கும் நான் செய்யக் கூடிய பிரதியுபகாரம் உண்டோ?' என்ற பீடிகையுடன் நன்றி செலுத்தப் போகிறாள்.

ஆம்; இப்போது பேச்சுத் தடை முற்றும் நீங்கி வாக்குப் பிரவாகமே வந்து விடுகிறது :

'மும்மையாம் உலகம்
தந்த முதல்வற்கும்
முதல்வன் தூதாய்ச்
செம்மையால் உயிர்தந் -
தாய்க்குச் செயல்என்னால்
எளிய துண்டே?

அம்மையாய் அப்ப -
னைய அத்தனே!
அருளின் வாழ்வே!

இம்மையே மறுமை
தானும் நல்கினை,
இசையோ(டு)' என்றாள்.

[மும்மை — மூன்று. முதல்வற்கும் முதல்வன் – பிரம்மதேவனுக்கும் முதல்வனான ராமன். செம்மை — நன்மை; நற்குணம். தந்தாய்க்கு - தந்த உனக்கு. செயல் — பிரதியுபகாரமான செய்கை. உண்டே—உண்டோ. அத்தன் – குரு ; கடவுள். இம்மையே மறுமை தானும்— இந்த லோக வாழ்வும், மறுலோக வாழ்வும். நல்கினை – கொடுத்தாய். இசையோடு - புகழுடன்.]

'அம்மையே!' என்றுகூட அனுமனை அழைக்கிறாள் சீதை. அந்தப் பிராணோபகாரியின் தூய தாயன்பினை எவ்வளவு நன்றாக உணர்ந்து விட்டாள்!

அந்தப் பிராணோபகாரம் செய்த அன்பார்ந்த ஆற்றலை நினைத்து 'அப்பனே!' என்கிறாள்.

அனுமனுடைய தூய அறிவை நினைத்து 'அத்தனே!' என்கிறாள். அதாவது, 'குருவே! என் கடவுளே!' என்று பொருள்படப் போற்றுகிறாள்.

தெய்வமே அந்த ரூபத்தில் தனக்கு உதவி செய்ய வந்து விட்டது என்று கூட நம்புகிறாள்.

இப்படியெல்லாம் அழைத்தும் திருப்தி அடையாமல் மேலும் மேலும் அன்பும் நன்றியறிவும் பொங்க, 'அருளின் வாழ்வே!' என்றும் அழைக்கிறாள்.

அம்மையாய் அப்ப -
னைய அத்தனே!
அருளின் வாழ்வே!

என்று உயிர் தந்த உத்தமனை அழைத்து, நன்றி தெரிவிக்கும் இந்தப் பண்பாட்டின் அழகைத்தான் என்னென்பது!

இவ்விதமாக நன்றியறிவிக்கும் சீதை இனி அனுமனை எப்படி வாழ்த்தப் போகிறாள்? வாழ்த்து வெளிப்படுவதற்கு முன் இன்னும் இரு வகையில் வாய் குளிர அழைத்து மகிழ்கின்றாள்.

அரக்கர் பேரூரில் சிறையிருக்கும் தன்னைக் கண்டு பேசத் துணிந்த அந்த மனோ பலத்தையும் தேக பலத்தையும் வியந்து பாராட்டுகிறது சீதையுள்ளம்.

அனுமன் ராமநாமம் சொல்லித் தன்னை வெளியிட்டுக் கொண்டதும்,

வீர, நீ யாவன்?
என்று கேட்டாளல்லவா? இப்போது,
பாழிய பணைத்தோள்
வீர!

[பாழிய — வலிமை பொருந்திய. பணைத் தோள்—பருத்த தோள்கள்.]

என்று அழைக்கிறாள்.

இப்போதும் பூர்ண திருப்தி அடையாதவளாகி, 'நிர்க்கதியாகத் துன்பத்திலே அழுந்திக் கிடந்த என்னைக் காப்பாற்றிய வள்ளலே!' என்றும் எவ்வளவு உருக்கமாக அழைக்கிறாள்.

'துணையிலேன் பரிவு தீர்த்த வாழிய வள்ளலே!' என்ற இச்சொற்றொடர் தான் மாசுமறுவில்லாத சீதையின் உள்ளத்தை எவ்வளவு தெளிவாய்ப் பளிங்கில் வைத்துக் காட்டுவது போலக் காட்டுகிறது!

வாழ்த்து

இப்படியெல்லாம் போற்றி அழைத்தபின்பு வாழ்த்தின் விவரம் வெளிப்படுகின்றது. பாட்டு முழுமையும் இப்போது பார்ப்போம் :

'பாழிய பணைத்தோள்
வீர! துணையிலேன்
பரிவு தீர்த்த
வாழிய வள்ள -
லே! யான் மறுவிலா
மனத்தேன் என்னில்,

ஊழிஓர் பகலாய்
ஓதும் யாண்டெலாம்,
உலகம் ஏழும்

ஏழும்வீவுற்ற
ஞான்றும் இன்றென
இருத்தி!' என்றாள்.

[பரிவு– துன்பம். வாழிய—வாழ்வாயாக. மறு–குற்றம். என்னில்-என்றால். ஊழி — யுகம். யாண்டு — ஆண்டு. வீவுற்ற—அழிவடைந்த. ஞான்றும் — நாளிலும். இன்றென – இன்றுபோல். இருத்தி—இருப்பாயாக.]

'சிரஞ்சீவியாக வாழ்ந்திருப்பாய்' என்பதுதான் வாழ்த்து. ஆனால் எத்தகைய சிரஞ்சீவி?

இன்றென இருத்தி

என்றல்லவா வாழ்த்துகிறாள்?

கடல் தாண்டி, இலங்கை அகழும் மதிலும் தாண்டி, அரக்கர்களின் கட்டுக் காவல்களையெல்லாம் தாண்டி வந்திருக்கும் இன்றைய தைரிய சாகசங்களுடன் அனுமன் என்றும் வாழ வேண்டுமாம்.


இந்த வீர யௌவன சௌந்தரியத்தோடும், பரோபகார உள்ளத்தோடும் அனுமன் என்றும் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டுமாம். இந்த இன்றைய மகத்தான தியாக புத்தியோடு வாழவேண்டுமாம்.

கையும் காலும் தளர்ந்து, பல்லும் சொல்லும் போய்க் கண் குழிந்து, காதும் அறிவும் ஒருங்கே மந்தமாகிப் பிறர் நகைக்கவும், பிறருக்குப் பெருஞ்சுமையாகவும் வாழ்கின்ற வாழ்வும் ஒரு வாழ்வாகுமா? — அதுவும் ஒரு வாழ்த்தாகுமா?



கணையாழியும் சூளாமணியும்

பி.ஸ்ரீ



14. வரலாற்றுச் சித்திரங்கள்

அனுமன் ராமனுடைய வரலாற்றைச் சீதைக்குக் கூறுவதெல்லாம் கணையாழி கொடுப்பதற்கு முன் நிகழ்கின்றது வால்மீகத்திலே. கம்பனே இந் நிகழ்ச்சியைச் சீதை கணையாழி வாங்கிக் கொண்ட பின் அமைத்திருக்கிறான்.

ஆதிகாவியப் போக்கு

'தசரதர் என்னும் ஒரு ராஜா இருந்தார்' என்று தொடங்கிய அனுமன, 'அவருடைய மூத்த குமாரனுக்கு ராமன் என்று பெயர்' என்று ராம சரித்திரத்தை வருணித்தான். அது கேட்டுத் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருந்த சீதை ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தாள். அந்த நிலையில் சீதை பதில் சொன்னதும், ராமனுடைய வரலாற்றை அனுமன் விவரிக்கலானான் என்பது முனிவரின் கதைப் போக்கு.

ராம லட்சுமணருடைய அவயவப் பொருத்தங்களையும், புயங்கள் முதலியவற்றையும் விஸ்தாரமாய் வருணித்தால் தனக்கு நம்பிக்கை பிறக்குமென்று அனுமனிடம் சீதை தெரிவித்தாள். அப்போது அனுமன், 'அவயவங்களெல்லாம் வெகு சுந்தரமாயிருந்தாலும் செந்தாமரை இதழ் போன்ற அக் கண்களின் அழகை என்னென்பேன்? மரத்திற்கு மரம் தாவிக் கொண்டு நன்மை தீமை தெரியாமலிருக்கும் குரங்காகிய என்னையும் மயக்குகின்றது அக் கண்ணழகு!' என்றெல்லாம் வருணித்தான்.

இந்த அவயவ வருணனைகளில் சில இன்றைய ரஸிகர்களைத் திகைக்கச் செய்கின்றன. எனினும் வால்மீகத்தில் இவ்வருணனைகள் கம்ப ராமாயணத்திலே காணப்படுகின்ற பாதாதிகேச வருணனைகளைப் போல் அவ்வளவு மோசமானவை யென்று சொல்ல முடியாது.

அவயவ வருணனைக்குப் பின், வானர ராஜ்யத்திற்கு அவர்கள் வந்து சேர்ந்ததையும், தான் நேரில் சந்தித்ததையும், வாலி வதமானதையும் விவரித்தான் அனுமன். தான் இலங்கைக்கு வந்து சேர்ந்தது வரையுள்ள வரலாற்றை விவரித்து விட்டு, 'அதி சீக்கிரமாக ராமன் இங்கு வந்து அழைத்துப் போவான்' என்றான். பிறகு கணையாழி கொடுத்தான் என்பது வால்மீகம்.

கணையாழி கொடுத்த பின்பும், சீதையைப் பிரிந்த நிலையில் ராமன் எப்படியெல்லாம் துன்பப்படுகிறான் என்பதை அனுமன சற்று வருணித்ததாகவும், கடைசியாகத தன் முதுகில் ஏறிக் கொண்டு புறப்படுமாறு சீதையை அனுமன் பிரார்த்தித்ததாகவும் வால்மீகி கூறியுள்ளார்.

கம்பன் போகும் வழி

கம்பனுடைய கதைப் போக்கிலோ, ராம நாமத்தால் சீதையின் உணர்ச்சியை வசீகரிக்கும் அனுமன், 'நீயார்?' என்று அவள் கேட்ட கேள்விக்கு அவள் உள்ளம் பூரிக்குமாறு விடை கூறிப் பிறகு அடையாளங்களும் சொல்லிக் கடைசியாகக் கணையாழி காட்டினான். அப்

பால் சீதை அனுமனை வாழ்த்தி விட்டு ராமபிரானது வரலாற்றை வினவுகின்றாள்.

இந்த வரலாறு இருபத்தொரு கவிகளில் கூறப்படுகின்றது. பிறகு அனுமனை நோக்கிச் சீதை, 'இச் சிறிய வடிவத்துடன் நீ கடலைக் கடந்தது எப்படியோ?' என்று கேட்க, அனுமன் தன் பேருருவைக் காட்டுகிறான்.

பேருருவம் சுருங்கியதும், சீதையின் பெருமகிழ்ச்சி வருணிக்கப் படுகின்றது. சீதை அனுமனைப் பெரிதும் புனைந்து பாராட்டுகின்றாள்.

அனுமன் நாணிப் பெரும் பணிவுடன் பேசும் போதே, சீதையை மேலும் குதூகலப்படுத்தி விடுகிறான். இவ்வளவும் நடந்த பின்புதான் அனுமன் சீதையை ராமபிரானிடம் தானே கொண்டு சேர்த்து விடலாமென்று கருதுகின்றான்.

இவ்விதமாகக் கதைப் போக்கிலே ஆதி காவியத்திற்கும் கம்ப ராமாயணத்திற்கும் உள்ள வேறுபாட்டைத் தெரிந்து கொண்ட நாம், இனி ராமனது வரலாற்றைச் சீதை வினவ அனுமன் கூறுகின்ற கட்டத்தைக் கருத்தூன்றி நோக்குவோம்.



அனுமனை இதற்குமுன் 'வீர!' என்று அழைத்தவள், இப்போது,

விழுமிய குணத்தோய்!

[விழுமிய—சிறந்த.]

என்று அழைத்து, மூன்று கேள்விகள் கேட்கிறாள்.

'ராமன் லட்சுமணனுடன் எங்கே இருக்கிறான்?' என்பது முதலாவது கேள்வி. அடுத்த கேள்வி, 'உன்னை ராமன் எங்கே சந்தித்தான்?' என்பது. 'ராவணன் என்னைக் கவர்ந்து சென்ற செய்தியை ராமன் எப்படித் தெரிந்து கொண்டான்?' என்பது மூன்றாவது கேள்வி. இவ்வினாக்களுக்கு விடைதான் அனுமன் கூறும் வரலாறு.

மூன்றாவது கேள்வி கேட்கும் போது சீதை தன் பெரும்பணிவை — விநய சம்பத்தை — வெளியிட்டுக் கொள்ளும் பண்பாட்டைக் காண்கிறோம்:

'ஆண்தகை, அடியேன்
செய்கை யார்சொல,
அறிந்த(து)?' என்றாள்.

[ஆண் தகை — புருஷோத்தமனாகிய ராமன்.]

அனுமன் விடையாகக் கூறும் வரலாற்றுத் தொடரிலே எத்தனை இசைச் செல்வமான சொற்றொடர்கள் 'சொல்லின் செல்வன்' வாயிலாகக் கதைக்கு உயிரும் ஒளியும் தருகின்றன! முதலாவது, பொன் மானாக வந்த மாரீசனை நினைப்பூட்டுவதைத் தான் பாருங்கள்.

மாரீச மாமாவின் திவ்ய சொரூபம் எப்படி வெளிப்படுகிறது பாருங்கள்:

*மழைக்கரு நிறத்து
மாய அரக்கன்மா —
ரீசன் என்பான்.*

'அந்தப் பொன்னுருவம், மின்னுருவமெல்லாம் நாடக மேடை உரு மாற்றம் தானம்மா! அட்டக் கரியன் உள்ளும் புறமும்! என்கிறான்.

உயிரை விடும்போது அதர்ம ஆவேசம் அதிகரிக்கிறது. இடையே மேற்கொண்டிருந்த போலி வேதாந்த மனப்பான்மையைத் துறந்தது போல், மான் வேஷத்தையும் நழுவ விட்டு, ராமனுடைய குரலைப் போல் குரல் காட்டிச் சீதையை வஞ்சித்தானல்லவா?

அந்தக் குரலை லட்சுமணன் கேட்டுக் கவலைப்படாதிருக்க வேண்டுமென்று ராமன் வில்லில் நாணொலி எழுப்பினான்.

அம் முயற்சி பயன் பட வில்லை; பொய் யென்றது" என்பதைத் தான்,

விளைந்தது விதியின்
மெய்ம்மை

என்னும் வசீகர வாசகத்தால் அனுமன் வெளியிட்டு ஆறுதலும் அளிக்கின்றான் சீதைக்கு.

லட்சுமணன் கவலைப்படாமல் சீதைக்குத் தொடர்ந்து காவலாக இருக்க வேண்டு மென்றல்லவா ராமன் வில் நாணொலி எழுப்பினான்? அந்தத் தம்பி தன் காவல் - கடமை துறந்து வந்து செய்தி சொன்னதும், ராமன் உடனே பர்ண சாலைக்கு விரைகின்றானல்லவா?

அங்கே சீதையைக் காணாத நிலையில் உள்ளம் என்ன பாடு பட்டிருக்க வேண்டும்! இறந்து படுவது போன்ற பெருந் துன்பம் அடைந்தான் என்பதற்குத் தான் எத்தகைய வசீகர சித்திரம் இது:

வண்டுறை சாலை
வந்தான், உன்திரு
வடிவு காணான்;
உண்(டு)உயிர்
இருந்தான்!
இன்னல் உழப்
பதற்(கு)
ஏது ஒன்றோ?

[வண்டு உறை சாலை - வண்டுகள் ரீங்காரஞ் செய்து கொண்டிருக்கும் பூஞ் செடி கொடிகளோடு கூடிய முன் வாசலையுடைய பர்ண சாலை. உன் திருவடிவு - மகாலட்சுமி சௌந்தரியம் என்று சொல்லத் தக்க உன் வடிவம். இன்னல் உழப்பதற்கு - துன்பம் அனுபவிப்பதற்கு. ஏது ஒன்றோ - காரணம் ஒன்றோ]

ராமன் சீதையுடன் வசித்து வந்த அந்தப் பர்ணசாலையை அன்புத் தம்பி எவ்வளவு ஆசையுடன் அழகு செய்து வைத்திருந்தான்! கோசல நாட்டிலே, அயோத்திமா நகரத்திலே, முன் வாசற் பூஞ்சோலையோ, முத்துப் பந்தலோ இல்லாத மாளிகை இல்லையென்று கவி வருணித்திருக்கிறானல்லவா? அந்தத் தோரணையில் இந்தப் பர்ணசாலையின் முன்வாசலையும் ஒரு குட்டிப் பூஞ்சோலையாக்கியிருந்தான் இளைய வீரன் எனக் கருதலாம்.

நித்திய வசந்தமான அப்பசுஞ் சோலையில் வண்டுகள் நித்திய வாசம் செய்து அந்த அழகைப் பண்பாடிப் புகழ்வது போல் முரன்று கொண்டிருக்குமாம்.

அந்த ரீங்கார கீதம் கேட்டுக் கொண்டே வருவான் வெளியே போயி



ருந்த ராமன். அப்போது சீதை பர்ணசாலையிலிருந்து வெளிப்பட்டு வர வேற்க வருவாள். வந்து, பூஞ்செடி கொடிகளுக்கிடையே அமைதியாக நின்று நோக்குவாள், வந்து கொண்டிருக்கும் ராமன் திருமுகத்தை.

அந்தச் சின்னஞ் சிறு பூஞ்சோலையில் பூமரம் செடி கொடிகளுக்கிடையே மகாலட்சுமியின் சிலையொன்று நிற்பது போலத்தோன்றும். அந்தத் திருவடிவை ராமன் என்றும் புதுமையாகக் கண்டு களிப்பது வழக்கம்.

ஆனால் இன்று இந்த மாய மான் வேட்டைக்குப் பின் விதியின் விசித்திர கதிதான் எப்படியாகி விட்டது, இந்தப் பர்ணசாலையையும், இதன் முன் வாசற் சோலையையும்!

வண்டுறை சாலை
வந்தான், உன் திரு
வடிவு காணுன்

என்ற இந்த வசீகர வாக்கியத்தை இசையோடு இசைத்துச் சொல்லிக் கொண்டு கனவு கண்டு கொண்டேயிருக்கலாம்!

பிறகு, ராமனுடைய அந்த மனநிலையை மூன்றே வார்த்தைகளில் சொல்லி விடுகிறுன் அனுமன்,

உண்(டு) உயிர், இருந்தான்!

என்று.

ஏன், மூன்று சொற்கள் கூட இல்லை. ராமனுடைய அந்தப் பிராணவஸ்தையைச் சொல்ல வந்த அனுமன். 'பிராணன் இருக்கத்தான் செய்கிறது!' என்று மட்டும் உறுதி கூறியது போல் 'உண்டு உயிர்' என்பதாக இரண்டு வார்த்தைகளாலேயே சொல்லி விட்டான். பிறகு 'உண்டு' என்பதாக முக்காலத்திற்கும் பொதுவாய்ப் பேசி விட்டோமே யென்று அதற்கு ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வந்தது போலத் தான், 'இருந்தான்' என்று இறந்த காலத்தில் சொல்லுகிறுன்.

இப்படி ரத்தினச் சுருக்கமாய்ச் சொல்லி ராமனது நிலையைச் சீதைக்கு விளங்க வைத்து அவளுக்கே ஒரு கேள்வியும் போட்டு விளக்கத்திற்கும் விளக்கம் காட்டி விடுகிறுன்.

'இன்னல் உழப்பதற்கு ஏது ஒன்றே?' — அதாவது துன்பம் அனுபவிப்பதற்குக் காரணம் ஒன்று தானு? — என்னும் இந்த வினுவின் புதைபொருளை ஊடுருவிப் பாருங்கள்.

நேர்ந்த விபத்து, "இன்னதென்று கூடத் தெரியாத நிலையில்" அப்படியோ? இப்படியோ? வேறு எப்படியோ?" என்றெல்லாம் ஆயிரம் கவலைகள் உள்ளத்தில் அலைபாயு மல்லவா? துன்பத் தீ ஏழு நாவால் அல்ல. ஆயிரம் நாவால் தகிக்குமல்லவா? இவ்வளவு புதை பொருளுக்கும், வினுக்குறி ஓர் அதிசய ஆற்றலை, உணர்ச்சி வேகத்தைத் தந்து விடுகிறது.

இப்படித் துன்பத் தீயை ஒரு காட்டுத் தீயாகக் காட்டியிருக்கும் அனுமன், சீதை முகம் நோக்கி அகம் அறிந்து, உடனே சீதையைத் தேற்றவேண்டுமென்று,

தேண்டி,நேர் கண்டேன்
வாழி!

[தேண்டி — தேடி. நேர் கண்டேன் - கண்ணுக்கு நேரே உன்னைக் காணப் பெற்றேன். வாழி — வாழ்வாயாக.] என்கிறுன்.

தீதிலன் எம்கோன்

[தீதிலன் — ஒரு தீங்கும் இல்லாமல் இருக்கிறுன். எம் கோன் — எமது தலைவனுகிய ராமன்.]

என்றும் கூறுகிறுன்.

ராமனுடைய மனநிலையை முன்பு சித்திரித்ததிலிருந்து, 'அவன் பிழைத்துத்தான் இருக்க முடியுமோ? உயிரை விட்டிருப்பானே?' என்ற ஐயம் சீதையுள்ளத்தைச் சுடு மல்லவா?

அதற்காக மேலும் தேற்றுகிறுன்:

ஆண்தகை நெஞ்சின் —
னின்றும் அகன்றிலை,
அழிவுண் டாமோ?


ஈண்டுநீ இருந்தாய்;
யாண்(டு)அங்கு எவ்வுயிர்
விடும்இ ராமன்?

[அகன்றிலை — விலகினுயில்லை. அழிவு உண்டாமோ — நீ நீங்காது அவன் மனத்திலே தங்கி யிருப்பதால், அவனுக்கு அழிவும் உண்டாகுமோ. ஈண்டு — இங்கே; இலங்கையில். யாண்டு — எவ்வாறு. அங்கு — அங்கே; வனத்தில். எவ்வுயிர் விடும் — எந்த உயிரை விடுவான்.]

இந்த வரலாற்றுச் சித்திரங்களைச் 'சொல்லின் செல்வன்' காட்டக் காட்ட, மேலும் தொடர்ந்து நோக்குவோம்.

கணையாழியும் சூளாமணியும்

பி.ஸ்ரீ



15. நெடு வழியில்

பர்ணசாலையிலிருந்து காணாமற் போய்விட்ட சீதையை ராமன் தேடித் திரிந்தானல்லவா? உணர்வழிந்து தேடிய அம்மன நிலையோடு ராமனைச் சீதைக்குப் படம் பிடித்துக் காட்டுகிறான் அனுமன்.

காடுகளிலும், ஆற்றங் கரைகளிலும் மலைப் பங்கங்களிலும் ஏதோ ஒரு 'ராபட்' யந்திர மனிதன் நடந்து தொடர்ந்து தேடிக் கொண்டிருப்பது போல ஒரு காட்சி:

துன்னிருங் கானும்
யாறும் மலைகளும்
தொடர்ந்து நாடி,

இன்னுயிர் இன்றி
ஏகும் இயந்திரப்
படிவம் ஒப்பான்!

[துன் இருங் கானும்—நெருங்கிய பெரிய காடுகளிலும். யாறும்—ஆறுகளிலும். இன்னுயிர் இன்றி—இனிய உயிர் இல்லாமலே. ஏகும் இயந்திரப் படிவம்—நடந்து போகும் ஒருவகை யந்திரப் பிரதிமை.]

'இன்னுயிரின்றி ஏகும் ராபட் மனிதனைத் தீர்க்கதரிசனமாய்க் கண்டு காட்டுவது போல், சீதையைப் பிரிந்து உணர்வழிந்து சோர்வுற்றிருந்த ராமனைக் காட்டுவதுடன், யந்திரம் போல் அவ்வளவு திறமையாகத் தேடிய அந்த முயற்சியையும் குறிப்பிடுவதாய் ஊகிக்கலாம்.

வாணிபம் செய்த கழுகு

இனி, இந்த நிலையில் இவன் போய்க் காணும் ஜடாயுவின் மகத்தான தியாக சித்திரம் ஒரே சொற்றொடரில்:

தன்னுயிர் புகழ்க்கு
விற்ற சடாயுவை
வந்து சார்ந்தான்.

ஜடாயுவின் உயிர்த்தியாகம் என்னும் அத்தனிப்பெரு நிகழ்ச்சியை நினைக்கும் போதே, கவிஞனுக்கு ஒரு விசேஷமான குதூகலம் ஏற்படுகிறது. 'தெய்வ மரணம்' என்றல்லவா அந்தத் தியாக மரணம் ஏற்கெனவே குறிக்கப் பெற்றது?

தமிழ்ப்பெரு மக்களின் வாணிபத் திறன் நினைவிற்கு வருகிறது. சொற்ப முதல் கொண்டு திரைகடலோடித் திரவியம் தேடிக் குவிக்கும் ஆற்றலுள்ளவர்கள் சமீப காலம் வரையில் தனவைசிய நாட்டில் காணப்படவில்லையா? அத்தகைய ஒரு பிரமாத வாணிபம் தான் செய்தானும் அருளின் சிகரம் ஏறி ஆருயிர்த் தியாகம் புரிந்த ஜடாயுவும்.

அற்ப உயிரைப் பெரும் புகழுக்கு விற்ற ஜடாயுவின் உயர்தர வாணிபத்தைப் பாராட்டுகிறான் அனுமன்: இதுவும் தமிழர்களின் லட்சிய வாணிபம் தான்!

ஜடாயு வயது முதிர்ந்தவன்; தசரத சக்ரவர்த்தியின் ஆருயிர்த் தோழன். ராம லட்சுமணரைத் தண்டகாரணியத்தில் கண்டு தன்னுடைய புதல்வர் போலவே பாவித்து அன்பு பாராட்டியவன். ராம லட்சுமணரும் தங்கள் தந்தையிலும் வயது முதிர்ந்த ஜடாயுவைப் பெரிய தந்தையாகவே மதித்தனர்.

ஜடாயு ராவணனோடு எதிர்த்துச் செய்த போரில் அடிபட்டுச் சிறகொடி

ந்து வீழ்ந்ததும் இறந்து போய்விட வில்லை. தன் சித்த சக்தியின் முதிர்ச்சி யால், 'நான் பிள்ளைகளான ராம லட்சு மணருக்குச் செய்தி சொன்ன பின்னரே இறக்க விரும்புகிறேன்' என்று சங்கற் பம் செய்து கொண்டு, கொஞ்ச நேரம் விடாப் பிடியாய் உயிரைப் பிடித்துக் கொண்டிருந்தான்.

குற்றுயிருடன் கிடந்த ஜடாயுவை ராமன் கண்டதும், 'தந்தையே, உனக்கு இந்தக் கதி வந்த வகை என்ன?' என்று வினவினான். அதற்கு ஜடாயு விடை கூறும்போது ராவணன் சீதையை வஞ் சித்துக் கவர்ந்து சென்ற அந்த நிகழ்ச்சி யைக் குறிப்பிட்டான்.

உடனே ராமனுக்குக் கோபாவேசம் பொங்கியது. 'மூன்று லோகங்களையும் அழித்து விடுவேன்' என்று வில்லை நோக்கினான்.

'அற்பன் ஒருவன் குற்றம் செய்ய, யாதொரு குற்றமும் அறியாத உல கத்தை அழிக்க முயல்வது தகுதி யன்று' என்பதாக ஜடாயு சமாதானப்படுத்தி னான், கிழத் தந்தை புதல்வனைக் கண் டித்து வழிப்படுத்துவது போல.

ஆனால் இதற்குள்ளே, சித்த சக்தியின் மகிமையால் சற்று நீடித்த உயிர்ச் சக்தி, பலிச்சென்று ஒய்ந்து போயிற்று. எனவே ஜடாயு இறந்து போனான்.

இந்தக் கதையை, சீதை முன் அவசர ராமாயணம் நடத்திக் காட்டும் அனும னும் ஐந்து பாடல்களில் பிரஸ்தாபிக் கிறான். பாடிப் பாடி அனுபவிக்க வேண்டிய பாடல்கள்.

இங்கே எடுத்த எழுத இட வசதி இல்லை.

செயந்நரு கடன்மை
யாவும் நேவரும்
மருளச் செய்நார்

[கடன்மை — புதல்வனின் கடமை யாகிய சரமகிரியை.]

என்று ஜடாயுவுக்கு ராம லட்சுமணர் தகன ஸம்ஸ்காரம் முதலிய கிரியை களைச் செய்த அந்த அதிசயத்தை மட் டும் குறிப்பிட்டு விட்டு, மேலே அனும னைத் தொடர்ந்து செல்வோம்.

கண்ணீர் வழி

உயர்ந்த மலைகளும் சிகரங்களும் அடர்ந்த காடுகளுமாயிருந்த பிரதேசங் களின் வழியாக ராம லட்சுமணர் போனதை அப்படியே சீதையின் கண் முன் கொண்டு வந்து காட்டுகிறான் அனுமன் :

புயல்தொடு குடுமிக்
குன்றும் கானமும்
கடந்து போனர்.

[புயல்தொடு — மேக மண்டலத்தை அளாவிய. குடுமிக் குன்றும் - சிகரங் களையுடைய மலைகளையும்.]

வழியல்லாத காட்டு வழிகளிலெல் லாம் தேடிப் போனர்களாம். இப்படி அவர்கள் போன அந்த வழிக்கு அடை யாளமும் சொல்வது போலப் பேசு கிறான் அனுமன்.

'தீயும், சிந்திய இரத்தமும் தாமர்லேன் என்ற முஸ்லிம் கொள்ளை வீரன் சென்ற பாதைக்கு அடையாளங்கள்!' என்று சரித்திரம் சொல்லுகிறது. சீதையைப் பிரிந்த ராமனும் தம்பியும் சென்ற பாதைக்கு,

செவ்வழி நயனம்,
செல்லும் நெடுவழி
சேறு செய்ய

[செவ்வழி நயனம் - எப்போதும் செம்மையான வழியையே கண்டு காட் டும் திருக்கண்கள் செல்லும். நெடுவழி— தாம் சென்று கொண்டிருந்த நீண்ட வழியை. சேறு செய்ய - சேறாக்குவது போல் கண்ணீர் பெருக்கிக் கொண் டிருக்க.]

என்று கூறி, ராமலட்சுமணரின் 'செவ் வழி' நயனங்களிலிருந்து முத்து முத் தாகச் சிந்திய 'இரத்த'க் கண்ணீரை அடையாளமாகக் காட்டுகிறான் அனு மன்.

'சொல்லின் செல்வன்' சொற்களை வாரி வீசுவதாகவே தோன்றவில்லை. காட்சி காட்சியாகக் கண் முன் வந்து போகிறது சீதை அறிய விரும்பிய அந்த வரலாறு.

இந்த நிலையில் ராமனுக்குச் சீதை மதுள்ள கங்கு கரையில்லாத காதலைப் புலப்படுத்தி, மங்கி எரிந்த இவளது மன விளக்கை மேலோங்கி ஜொலிக் கச் செய்ய வேண்டுமென்று கருது கிறான் அனுமன்.

உன்மத்த நிலையிலும் சமநிலை

'அம்மா, ராமன் உன்னைப் பிரிந்த அந்தப் பெருங் கஷ்ட மிகுதியிலே பைத்தியம் பிடித்தவனாகி விட்டான்!' என்று கூடச் சொல்லுகிறான்.

உன்மத்தன் ஆனான்

என்று சொல்லிச் சீதையின் காதலுள்ளத்திற்குப் பிரமாதமாக ஆறுதல் அளிக்கிறான்.

இந்த உன்மத்த நிலையை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு பீடிகையாக வருகிறது,

கன்மத் தைஞாலத்-
தவர்யா ருளரேக-
டப்பார்?

[கன்மம்—கர்மம்; ஊழ்வினைப் பயன். ஞாலத்தவர் — இவ்வுலகத்தி லுள்ளவர்கள்.]

என்ற வினா.

ராமனுடைய அருமைத் திருமேனியைச் சீதையின் கண்களால் நோக்குவது போல் நோக்கிப் பேசுகிறான்:

பொன்மொய்த் ததோளான்
மயல்கொண்டு புலன்கள்
வேறாய்...

உன்மத் தன்ஆனான்,
தனைஒன் றும் உணர்ந்தி-
லாதான்

[பொன் மொய்த்த தோளான் — அழகு நிறைந்த வீரத் தோள்களையுடையவன். மயல் — மயக்கம். புலன்கள் வேறாய் — ஐம்புலன்களும் ஒன்றோடொன்று ஒத்துழையாமை செய்யும் விபரீத சுதந்திரம் அடையப் பெற்று.]

அனுமன் ராமனை உன்மத்தனாக்கிச் சீதையிடம் பேசுவது சரிதான். ஆனால் கம்பனுக்கு இப்படிப் பாடி அரங்கேற்றுவதில் ஓர் இடர்ப்பாடு ஏற்பட்டிருக்கக் கூடும்.

கம்பன் வாழ்ந்த பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் சைவ வைணவசமயப் போட்டி பூசல்களுக்குக் குறைவில்லை. 'அரி உயர்ந்தவனா? அரன் உயர்ந்தவனா?' என்னும் பிரசினை சைவ



வைணவ உள்ளங்களைக் குழப்பி மயல் கொள்ளச் செய்த காலம் அது.

'உன்மத்தன் ஆனான்' என்று ராமனைச் சொன்னதுமே, 'ஓஹோ, அந்த உபத்திரவமெல்லாம் "பிறவா யாக்கைப் பெரியோனா"கிய எங்கள் சிவபெருமானுக்கு இல்லை' என்று சைவர் சொல்லி வைணவர்களைப் பரிகசிக்கவும் கூடுமல்லவா?

இந்த நிலையில் சைவ வைணவ சமரச வாதியாகிய கம்பன் ஓரளவு நகைச்சுவையுடன் ராமனுடைய உன்மத்த நிலைக்குச் சிவபெருமானுடைய உன்மத்த நிலையையே உபமானமாக்கி விடுகிறான்:

நன்மத் தைநாகத்(து)
அயல்சூடிய நம்ப-
னேபோல்

உன்மத் தன்ஆனான்,
தனைஒன்றும் உணர்ந்தி-
லாதான்!

[நன்மத்தை – நல்ல ஊமத்தம் பூவை. நாகத்து அயல் சூடிய – பாம்புகளின் பக்கத்தில் அணிந்து கொண்ட. நம்பனே போல் - அடியார்கள் நம்பிச் சரணமடைகின்ற சிவபெருமானைப் போல.]

சிவபெருமான் உன்மத்தன் என்பதற்குச் சான்றாக—பிரத்தியட்ச சாட்சியாக—அப்பெருமான் அணிந்திருக்கும் ஊமத்தம் பூவைக் காட்டுகிறான் கவிஞன். அபாய உணர்ச்சி சிறிதும் இல்லாமல் விஷப் பாம்புகளை ஆபரணமாக அணிந்திருப்பது அதற்கும் மேலான சாட்சி.

'பித்தா! பிறைசூடீ!' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்ய வில்லையா? திருமூல நாயனார்,

ஓதும் சடையாட,
உன்மத்தம் உற்றாட

என்று சீராடிக் கொண்டாட வில்லையா, அந்த உன்மத்த நடனத்தை?

இந்தச் சிவநேசப் பெரியார்களையும் சாட்சியாகக் கொண்டு தான் சிவபெருமானை 'உன்மத்தன்' என்று குறிப்பிடுகிறான் கம்பன்.

சிவபெருமான் தன்னல மென்பதை உணர்வதே இல்லையாம்.

எல்லாரும் இன்புற்-
றிருக்கநடம் ஆடுகின்றாய்!

என்று இராமலிங்க அடிகள் கூறுவது தானே உன்மத்த நடனத்தின் உட்பொருள்? ஆனால் 'தனை ஒன்றும் உணர்ந்திலாதான்' தன்னலப் புலிகளான லௌகிகர்களுக்குப் பைத்தியக்காரன் தானே?

சிவபெருமான் உலக நலத்தையே நினைத்துக் கொண்டு தன்னை மறந்து ஆடுகிறானென்றால், ராமபிரான் சீதையையே நினைத்துக் கொண்டு 'தனை ஒன்றும் உணர்ந்த'தில்லையாம்.

சிவபெருமானை ஓர் அழகான நிந்தாஸ்துதியால் போற்றிய வண்ணம், கம்பன் தன் ராம பக்தி வாயிலாகச் சைவ வைணவ சமரஸம் காண்கிறான் என்பது உய்த்துணரத் தக்கதோர் அழகிய உண்மையாகும்.

*　　　*　　　*

இவ்வளவு அழகாகப் பொருள் பொதிந்ததொரு பொன்னுரையால் சீதைக்கு ராமன் காதலை உணர்த்திய அனுமன், அந்தப் பைத்தியம் ஒருவாறு தெளிந்தது ராமலட்சுமணர் கிஷ்கிந்தைக்கு வந்து சேருவதற்கு முன்பே என்கிறான்.


பைத்தியம் தெளிவித்த வைத்தியன் வேறு யாருமில்லை, ஆருயிராகிய தம்பி லட்சுமணனே தான். இந்த வைத்தியன் கொடுத்த மருந்தும் வேறு எதுவுமில்லை, இந்த அருமைத் தம்பியின் அன்புச் சொற்களே.

மனோ வியாதி நீங்கப்பெற்ற ராமன் கிஷ்கிந்தை வந்து சேர்ந்து சுக்கிரீவனைப் பிராண சிநேகிதனாக ஏற்றுக் கொள்கிறான்.

சீதையைத் தேடிச் செல்வதற்கு நாலு திசைகளிலும் சுக்கிரீவன் படைவீரர்களை அனுப்பியதாகச் சொல்லி விட்டு அனுமன், ராமனே தன்னைத் தெற்குத் திசையில் செல்லுமாறு ஏவியதாகக் கூறி முடிக்கின்றான்.

கணையாழியும் சூளாமணியும்

டி. ஸ்ரீ



16. விசுவரூப விநயம்

'ராமன் சீதையைப் பிரிந்த நிலையில் எவ்வளவோ வருந்தினான்; உன்மத்தன் போல் புலம்பினான்' என்றெல்லாம் 'சொல்லின் செல்வன்' சீதை காதில் போட்டு வைத்தானல்லவா? காதலனுடைய வருத்தத்தைக் காதலியின் உள்ளத்தில் புகச் செய்வதே அந்த நிலையில் சீதைக்கு ஆறுதல் அளிக்கும் உபாயம் என்பதை எவ்வளவு நன்றாக உணர்ந்திருந்தான்! சொல்லின் செல்வன் உளநூற் செல்வனும் கூட.

அனும வைத்தியத்தின் வெற்றி

அநுமன் எண்ணம் அப்படியே பலிக்கிறது. மிக்க பொறுமையுள்ள ராமனுடைய வயிர நெஞ்சையும் வருத்தம் என்ன பாடு படுத்துகிறது என்பதைச் சீதை நினைத்துப் பார்க்கிறாள். ஏன், அந்த வருத்தம் இந்த நெஞ்சிலே வந்து புகுந்து கொள்கிறது; இவளுடைய சொந்தத் துன்பத்திற்கு இடமில்லாமல் செய்து விடுகிறது.

காதலன் அநுபவிக்கும் பிரிவுத் துன்பம் இப்போது துன்பமும் உவகையும் கலந்த ஒருவகைக் கலவையுணர்வாகச் சீதையைத் தேற்றுகிறது. ராமனைப் பற்றிய ஏக்கம் இவளுக்கு ஊக்கமுட்டுகிறது!

சீதையின் இத்தகைய மானஸ அநுபவத்தைப் பளிங்கில் வைத்துக் காட்டுவது போல் காட்டுகிறது பாட்டு:

> அன்பினன் இவ்வுரை
> உணர்த்த, ஆரியன்
>
> வன்பொறை நெஞ்சினன்
> வருத்தம் உன்னுவாள்,
>
> என்புற உருகினள்,
> இரங்கி ஏங்கினள்,
>
> துன்பமும் உவகையும்
> சுமந்த உள்ளத்தாள்.

[அன்பினன் — அன்புள்ள அநுமன். இவ்வுரை உணர்த்த — இவ்வார்த்தைகளைச் சொல்ல. ஆரியன் — பெரியோனாகிய ராமன். வன்பொறை நெஞ்சினன் — மிக்க பொறுமை கொண்ட நெஞ்சையுடையவன். உன்னுவாள் — நினைப்பவளான சீதை. என்பு — எலும்பு. உற — மிகுதியாக. என்புற உருகினள் — எலும்பே மிகவும் உருகுவது போலத் தோன்றுமாறு உள்ளம் உருகியவளாய்.]

சீதையின் நிலையும் கேள்வியும்

இப்போது சீதையைப் பார்த்தால், கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறாள், உள்ளமே உருகி வருவது போல. சூட்சுமமாக நோக்கவே, கண்ணீர் — துன்பமும் உவகையும் கலந்த கண்ணீர் — பெருகிப் பொங்கும் ஒரு வெள்ளம் போலத் தோன்றுகிறது.

சேறும் நீருமாய்த் தெளிவில்லாது கலங்கி வரும் வெள்ளத்திலே பயங்கரமாகச் சுழிக்கின்ற ஒரு நீர்ச் சுழியில் சுழல்வது போலச் சாய்கின்றதாம் சீதையின் மெலிந்த உடம்பு.

இந்த உருவம், சிறு குரங்கு போலக் கண் முன் நிற்கும் அந்த உருவத்தை நோக்கி ஒரு கேள்வி போடுகிறது :

நையுறு சிந்தையள்,
நயன வாரியின்

தொய்யல்வெஞ் சுழியிடைச்
சுழிக்கும் மேனியள்,

'ஐய, நீ அளப்பரும்
அளக்கர் நீந்தினை,

எய்திய(து) எப்பரி(சு)?
இயம்பு வாய்' என்றாள்

[நையுறு – நைந்து உருகுகின்ற. நயன வாரி – கண்ணீர்ப் பெருக்கு. தொய்யல் – சேறு. வெஞ்சுழியிடை – பயங்கரமான நீர்ச் சுழியிலே. அளப்பரும் அளக்கர் - அளவிடுவதற்கு அரியகடலை. நீந்தினை - கடந்து. எய்தியது - இங்கே வந்து சேர்ந்தது. இயம்புவாய் – சொல்வாயாக.]

'இந்தச் சிறு குரங்கு அளவிடற்கரிய பெருங்கடலை எப்படித் தான் நீந்தி இங்கே வந்து சேர்ந்து விட்டதோ!' என்னும் அதிசய பாவம் சீதையின் வினாவிலே.

விடையின் விசித்திரம்

இச் 'சொல்லின் செல்வன்' பக்திச் செல்வனும் கூட — ராம பக்திச் செல்வன். இது எவ்வளவு அழகாய் வெளிப்படுகிறது இவன் விடையிலே! ராம பக்தி, தன்னம்பிக்கை, நம்பிக்கை சுருங்கியிருந்த சீதையைத் தேற்றல் என்னும் மூன்று அம்சங்களும் ஒரு தனிப்பெரும் பணிவுடன் வெளிப்படுகின்றன அனுமனது விடையிலே.

பக்தியும் பணிவும் பண்பாடும் சிந்தனைச் செல்வமும் அலைமொழிக்கின்றன இந்த வாசகத்திலே :

'சுருங்கிடை! உன்ஒரு
துணைவன் தூயதாள்

ஒருங்குடை உணர்வினர்,
ஓய்வில் மாயையின்

பெருங்கடல் கடந்தனர்
பெயரும் பெற்றிபோல்,

கருங்கடல் கடந்தனென்
காலி னால்!' என்றான்.

[சுருங்கு இடை – நுட்பமான இடையுள்ளவளே; சீதாபிராட்டியே. உன் ஒரு துணைவன் – உன்னுடைய ஒப்பற்ற கணவனாகிய ராமன். தூய தாள் – தூய்மையுள்ள திருவடிகளை, ஒருங்கு உடை உணர்வினர் – தியானம் செய்யும் அறிஞர்கள். ஓய்வில் – ஓய்வு இல்லாத. மாயையின் பெருங்கடல் –மாயையாகிய பெருங்கடல். கடந்தனர் பெயரும் — கடந்து செல்லும். பெற்றி போல் — தன்மைபோல்.]

ராமனுடைய திருவடிகளை நம்பித் தியானிக்கும் ஞானிகள். ஓய்வு ஒழிவு இல்லாமல் அலை வீசிக் கொண்டிருக்கும் மாயை யென்னும் பெருங்கடலையே அநாயாசமாகத் தாண்டி விடுகிறார்களாம். எந்தக் கால் கொண்டு எப்படித் தாண்டுகிறதோ ஆத்மா மாயா சமுத்திரத்தையும்!

'அப்படியே நானும் இந்தக் கருங் கடலைத் தாண்டிவிட்டேன், ராமநாமத்தின் மகிமையால், ராம தியானத்தின் சக்தியால்; நான் காலினால் தாண்டினேன் : இதில் என்ன அதிசயம்!' என்னும் அனுமனது விடை, பக்தி யுள்ளங்களுக்கு இன்னமுதமாகும்.

இது கேட்ட சீதை புன்னகை புரிகின்றாள், 'ஏதோ வேதாந்தம் பேசுகிறானே; காரியப் பேச்சாக இல்லையே' என்று கருதுவதுபோல.

அதே கேள்வியும் முறுவலும்

எனவே மீண்டும் கேட்கிறாள், 'இந்தச் சிறிய உருவம் கடலை எப்படித் தாண்டி விட்டது!' என்பதாக.

'இத்துணைச் சிறியவோ!
என்னும் யாக்கையை,

தத்தினை கடல்; அது
தவத்தின் ஆயதோ?

சித்தியின் இயன்றதோ?
செப்பு வாய்' என்றாள்,

முத்தினும் நிலவினும்
முறுவல் முற்றினாள்.

[இத்துணை — இவ்வளவு. சிறியவோ — சிறியதோ. என்னும் யாக்கையை — என்று நினைக்கக்கூடிய உடம்பையுடைய நீ. தத்தினை கடல் — கடலைத் தாண்டி வந்தாய். அது தவத்தின் ஆயதோ — அது தவ வலிமையால் ஆகியதோ. முத்தினும் நிலவினும் முறுவல் முற்றினாள் — முத்தைக் காட்

டிலும், வெண்ணிலவைக் காட்டிலும் ஒளி மிகுந்துள்ள புன்னகையோடு கூடிய சீதை.]

தவளை தத்தித் தத்திச் சிறு நீரோடையின் ஒரு கரையிலிருந்து அடுத்த கரைக்குப் பாய்ந்து போவது போன்ற ஒரு பாவம் தொனிக்கிறது 'தத்தின கடல்' என்னும் கூற்றிலே.

அந்தப் புன்னகையும் இந்தப் புன்னகையும்

ராமனுடன் காட்டுக்கு எப்படியாவது போகத்தான் வேண்டும் என்னும் பிடிவாதத்துடன் தானும் மரவுரி கட்டி ராமன் அருகே வந்து நின்ற அந்தத் தினத்திலும், சீதை இப்படி ஒரு முறுவல் புரிந்ததுண்டு.

அந்தப் புன்னகையின் பொருள் 'எல்லையற்ற இடர்' என்பதாக ராயன் வியாக்கியானம் செய்ததுமுண்டு.

முல்லையும்கடல்
முத்தும் எதிர்ப்பினும்
வெல்லும் வெண்ணகை

என்று ராமன் அந்தப் புன்னகையை அன்று குறிப்பிட்டான். அந்தப் புன்னகை அப்போது சீதைக்கு வெற்றி அளித்தது போலத்தான் தோன்றியது.

இந்தப் புன்னகையோ உள்ளபடியே அனுமனுடைய தூதின் வெற்றிதான். இதை உய்த்துணர வைக்க,

முத்தினும் நிலவினும்
முறுவல் முற்றினாள்

என்கிறான் கவிஞன். வெண்ணிலவின் தண்மையும் வெண்முத்தின் வசீகரமும் ஒருங்கே கலந்தமைந்த கவிதைப் பகுதி.

விசித்திரமான பேருருவம்

இந்த நிலையில் சீதைக்குத் தன் பேருருவம் காட்டி ஐயம் தெளிவிக்கின்றான் அனுமன் :

சுட்டினன் நின்றனன்,
தொழுத கையினன்,
விட்டுயர் தோளினன்,
விசும்பின் மேக்குயர்
எட்டரு நெடுமுக(டு)
எய்தி நீளுமேல்
முட்டும் என்(று), உருவொடும்
வளர்ந்த மூர்த்தியான்.

[சுட்டினன் நின்றனன் — சுட்டிக் காட்டியதுபோல நின்றான். விட்டு உயர் தோளினன் — வெளிப்பட்டு உயர்ந்து கொண்டிருக்கின்ற தோளை யுடையவன். விசும்பின் — ஆகாயத்தின். மேக்கு உயர் — மேலே உயர்ந்த. எட்டரு—



எட்டுதற்கு அருமையாக. நெடுமுகடு — நீண்ட வான உச்சியை. மீனு மேல் — பின்னும் நீண்டு சென்றுள். மூர்த்தியான் — வடிவத்தை உடையவன்.]

ஒரு குடிசைக்குள் ஆறரை அடி அல்லது ஏழு அடி உயரமுள்ள 'உயர் திருவாளன்' ஒருவன் வாது சேர்ந்து நிமிர்ந்து நின்றால், கூரையில் தலை இடிக்குமே மென்று தனது நீண்ட உருவத்தைச் சற்று வளைத்துக் கொண்டிருப்பது போல், விசுவரூப அனுமனும் இப்போது காணப்படுகிறானாம்.

பெரியோர் முன்பு நிமிர்ந்து நிற்பது நமது நாட்டிலே ஒரு பண்பாட்டுக் குறைவு. விசுவரூப அனுமனும் சீதைக்குப் பேருருவம் காட்டுவதுபோல் பெருவணக்கமும் காட்டுகிறான் என்பது குறிப்பு.

இந்த வணக்க ஒடுக்கங்களால் வானுற ஓங்கிய அந்தப் பேருருவத்தின் பெருமைக்கு ஒரு குறைவும் இல்லையாம்:

ஒத்துயர் கனகவான்
கிரியின் ஓங்கிய
மெய்த்துறு மரந்தொறும்
மின்மி னிக்குலம்
மொய்த்துள வாமென
முன்னும் பின்னரும்
தொத்தின தாரகை,
மயிரின் சுற்றெலாம்.

[ஒத்த உயர் கனகவான் கிரியில் — தன்னைத்தானே ஒத்து எல்லா மலைகளிலும் உயர்ந்துள்ள பொன் மயமான பெரிய மேரு மலையில். மெய் துறுதம் வடிவம் ஒன்றோடொன்று நெருங்கிய. மரம் தொறும் — மரங்கள் தோறும். மின் மினிக் குலம் — மின்மினிப் பூச்சியின் கூட்டம். மொய்த்துள ஆமென — நெருங்கியுள்ளன போல. தொத்தின — தொத்திக் கொண்டன. தாரகை — நட்சத்திரங்கள். மயிரின் சுற்றெலாம் — உடம்பிலுள்ள ரோமங்களின் சுற்றிடமெங்கும்.]

பணிவுப் போட்டி

சீதை பார்க்கின்றாள் இந்த விசவரூப அனுமனை. என்ன உவகை! பணிவு தான் எப்படித் தொனிக்கின்றது இவள் பேச்சிலும்.

வஞ்சிஅம் மருங்குல்அம்
மறுவில் கற்பினள்
கஞ்சமும் புரைவன
கழலும் கண்டிலாள்;
துஞ்சினர் அரக்கர்என்(று)
உவக்கும் சூழ்ச்சியாள்,
'அஞ்சினென், இவ்வுரு
அடங்கு வாய்' என்றாள்.

[வஞ்சி அம் மருங்குல் — வஞ்சிக்கொடி போன்ற நுண்ணிய அழகிய இடையையுடைய. மறுவில் — குற்றமில்லாத. கஞ்சமும் புரைவன — செந்தாமரை மலரை ஒத்திருப்பனவான. கழலும் கண்டிலாள் — அனுமனது பாதங்களையும் காண முடியாதவளாய். துஞ்சினர் — இறந்து விட்டார்கள். சூழ்ச்சியாள் — ஆலோசனை யுடையவளாகி.]

சீதையின் உவகை யுணர்ச்சி, 'இராமன் தோள்களைத் தழுவினளாமெனத் தளிர்க்கும் தன்மை' என்று வருணிக்கப்படுகிறது.

விசுவரூப அனுமனின் விடையிலுள்ள பணிவைத்தான் கேளுங்கள்!

ஆண்தகை அனுமனும்
'அருள்அ தாம்' என
மீண்டனன்.

[அருள் அது ஆம் என — உன்னுடைய திருவருளாகிய நியமனப்படியே, சிறியேன் செய்வது என்று சொல்லிக் கொண்டே மீண்டனன் — வளர்ச்சியினின்று ஒடுங்கிச் சுருங்கி நின்றான்.]

பெருங்குணத்திற்கேற்ற பேருருவம் என்று தோன்றுகிறது விசுவரூபம். விநயமோ அனுமனது சிறிய உருவிலும் விசுவரூபம் கொண்டது போலவே காண்கின்றது!


சுந்தர காண்டத்தின் அதி சுந்தரமான பகுதிகளில் ஒன்று இது! சுந்தர காண்டமே கவிதா சௌந்தரியத்தைச் சிறப்பியல்பாகக் கொண்டதென்று கருதலாம்.

வால்மீகத்திலே விசுவரூப - பிரஸ்தாபம் இந்தச் சந்தர்ப்பத்தில் வரவில்லை. 'நான் உன்னை எடுத்துக் கொண்டு கடல் கடந்து போய் ராமபிரானிடம் சேர்த்துவிடுகிறேன்' என்று அனுமன் கூற, சீதை 'இவ்வளவு சிறிய உருவத்தையுடைய நீ எப்படி என்னையும் தூக்கிக் கொண்டு கடல் கடப்பாய்?' என்று கேட்கிறாள். அப்போது அனுமன் விசுவரூபம் காட்டுகிறானாம்

இங்கே கம்பனுடைய வேறுபாடு 'உருக்காட்டு படலம்' என்றும், 'திருவாழி காட்டு படலம்' என்றும் சொல்லப்படும் இப்படலத்திற்கு ஒரு கவிதைச் சிகரமாகிறது.

கணையாழியும் சூளாமணியும்

பி.ஸ்ரீ



17. அலைகளின் வெள்ச்சி ஸிகரம்

கணையாழி கண்டு அனுமனது பேருருவத்தையும் கண்டபின் சீதை ஓர் ஆனந்த அதிசய சிகரத்தை அடைந்து விட்டாள் என்றே சொல்ல வேண்டும்.

கடல் தாண்டி வந்ததே நம்ப முடியாத ஓர் அதிசயமாகத் தோன்றியது முன்பு: இப்போதோ அனுமன் செய்யவே முடியாத எந்தக் காரியத்தைச் செய்தான் என்றாலும் — செய்தான் என்று யார் சொன்னாலும் — சீதை நம்பச் சித்தமாகி விட்டாள்.

ஆனந்த வெறி

மலைகளைப் பேர்த்து விட்டான் அனுமன் என்றாலும் சரி; நிலவுலகத்தையே பேர்த்து விட்டான் என்றாலும் சரி; அனுமன் திறமைக்கு அதுதான் ஒரு சிறப்பா?— என்று கூட நினைக்கும் மனநிலைக்கு வந்து விடுகிறாள் சீதை.

வானத்தையே பேர்த்தெடுத்துத் தூக்கி விட்டான் என்று சொன்னால் தான் என்ன? இப்போதுள்ள ஆனந்த வெறியில் சீதை நம்பி விடுவாளாம். அதனால் தான அனுமனின் பேராற்றலுக்குப் பிரமாதமாக என்ன சிறப்பு வந்து விட்டது என்று இவள் கேட்கவும் கூடுமாம்.

கடல் கடந்தானே என்று அதிசயித்த அந்த மனநிலை, இந்த ஆனந்த வெள்ளத்திலே எத்தனையோ மைல்களுக்குக் கீழே புதைந்துபோய் விட்டது. கடந்ததா அதிசயம்? — கடலில் நடந்தே வந்து விட்டான், கட்டாந் தரையில் நடப்பது போலே என்றாலும், 'அப்பா, இதில் நான் அதிசயப்பட வேண்டிய அம்சம் ஒன்றுமில்லை. நீ வெட்கப்பட வேண்டிய காரியம் தான் இது!' என்று அனுமனை நோக்கிச் சொல்லி விடுகிற மனநிலை தான் சீதைக்கு இப்போது.

சீதையின் ஆனந்த அதிசய அலை, இந்த விதமாகத் தான் முதன் முதல் வெளிப்படுகின்றது:

நடந்தாய் இடையே
என்றாலும், நாணும்
நினைக்கு! நளிர்கடலைக்
கடந்தாய் என்றல்
என்னாகும்? காற்றே
அன்ன கடுமையாய்!

[நளிர் கடல் — குளிர்ந்த கடல். காற்றே அன்ன கடுமையாய் — காற்றைப் போன்ற வலிமையுள்ளவனே. கடுமை — (இங்கே) வலிமை.]

வேறொரு அலை

'**நீ**டூழி வாழ்க' என்று எல்லாரையும் தான் எல்லாரும் தான் வாழ்த்துகிறார்கள். சீதையின் நீடூழி வாழ்த்தோ உபசாரமன்று; உள்ளபடியே ஊழிபலவும் அனுமனை நிலைநிறுத்தி விட்டது என்கிறது கவிஞன் கனவு.

அத்தகைய அனுமன் ஒருவனே ராம பிரானது அருளையும் புகழையும் ஊழி பலவும் நிலை நிறுத்தி விடுவான் என்கிறாள் சீதை இப்போது. இந்த மனப்

போக்கிலேயே அனுமனின் பெருமையை விசுவரூபமாய்க் காண்பது இயல்பு தானே?

ஆனந்த அதிசய உணர்ச்சியின் இரண்டாவது அலை இது; முன்னிலும் பெரிது:

ஆழி நெடுங்கை
ஆண்தகைதன் அருளும்
புகழும் அழிவின்றி

ஊழி பலவும்
நிலைநிறுத்தற்(கு), ஒருவன்
நீயே உளையானாய்!

பாழி நெடுந்தோள்
வீரா, நின் பெருமைக்(கு)
ஏற்பப் பகைஇலங்கை

ஏழு கடற்கும்
அப்புறத்த(து) ஆகா-
திருந்த(து) இழிபன்றோ?

[ஆழி நெடுங்கை - ஆக்ஞா சக்கரத்தை யுடைய நீண்ட கைகள். ஆண்தகை - ஆண்மைக் குணமுள்ள ராமன். உளை யானாய் - உள்ளவன் ஆனாய். பாழி - வலிமை. இழிபு - இழிவு.]

மூன்றாவது அதிசய அலை

இன்னும் ஒரு பேரானந்த உணர்ச்சி-அலை, சீதை வாக்கிலும் உள்ளத்திலும்:

மின்நேர் எயிற்று
வல்லரக்கர் விக்கம்
நோக்கி வீரற்குப்

பின்னே பிறந்தான்
அல்லாதோர் துணையி-
லாத பிழைநோக்கி,

உன்னா நின்றே
உடைகின்றேன், ஒழிந்தேன்
ஐயம்; உயிர்உயிர்த்தேன்;

என்னே நிருதர்
என்ஆவர், இவனே
எங்கோன் துணையென்றால்?

[மின் நேர் - மின்னலை ஒத்த. எயிற்று வல்லரக்கர் - பற்களையுடைய வலிய அரக்கர்கள். விக்கம் - பெருக்கம். வீரற்கு - வீரனாகிய ராமனுக்கு. உன்னா நின்றே - சிந்தித்துக் கொண்டே. உடைகின்றேன் - மனம் உடைகின்ற நான். ஒழிந்தேன் ஐயம் - ஐயம் ஒழியப் பெற்றேன். என்னே - என்ன குறை இனி எனக்கு. நிருதர் - அரக்கர்கள். என் ஆவர் - என்ன ஆகிவிடுவார்கள். இவனே எம்கோன் துணை யென்றால் - இப்படிப்பட்ட மகா புருஷனே எனது கணவனுக்குத் துணையாக ஏற்பட்டால்.]

அனுமனை முன்னிலைப் படுத்தாமல் தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறாள். ஆனந்த அலை சீதையை இப்படியெல்லாம் சூழ்ந்து கொள்கிறது.

இன்பத்தின் இறுதிச் சிகரம்

இறுதியாகப் பொங்கி வரும் ஆனந்தப் பேரலை அனுமனைத் திரையிட்டு மறைத்து விடுகிறது; சீதை அனுமனை மறந்து தனக்குத் தானே பேசிக்கொள்கிறாள். ஆனந்த அலைக்குள் சீதை மூழ்கிப் போவது போல ஒரு தோற்றம்!

கம்பன் கவிதை தன்னையும் மிஞ்சிப் பொங்கும் ஒரு போக்கைக் காண்கிறோம் இப் பாட்டிலே:

'மாண்டேன் எனினும்
பழு(து)அன்றே; இன்றே
மாயச் சிறைநின்றும்

மீண்டேன்; என்னை
ஒறுத்தாரைக் குலங்க
ளோடும் வேரறுத்தேன்;

பூண்டேன் எங்கோன்
பொலங்கழலும்; புகழே
அன்றிப் புன்பழியும்

தீண்டேன்' என்று
மனமகிழ்ந்தாள், திருவின்
முகத்துத் திருஅன்னாள்.

[ஒறுத்தாரை - ஹிம்ஸித்தாரை. எம்கோன் பொலங்கழலும் - என் கணவனுடைய அழகிய திருவடிகளையும். பூண்டேன் - பூணாக அணிந்து கொண்டேன். திருவின் முகத்துத் திரு அன்னாள் - மகாலட்சுமியின் முகத்திலே குடிகொள்ளும் மகாமகாலட்சுமி போன்றவள்.]

இத்தகைய கவிதைக்கு விளக்கம் காட்டுவதே இயலாத காரியம். 'ஓதி ஓதி உணருந்தொறும் உணர்ச்சி உதவும்' தனிப் பெருங் கவிதையினத்தைச் சார்ந்தது.

கண்ணனுடைய பால லீலைகளில் ஒன்றை மிகவும் அதிசயமாகக் கண்ட யசோதையைத் 'தொல்லை இன்பத்து இறுதி கண்டாளே! என்று வருணிக்கிறார் குலசேகராழ்வார். இங்கே சீதையும் தூது வந்து வெற்றி பெற்ற அனு

மனைப் புனைந்துரைத்து அவனையும் மறந்து ஆனந்த அதிசயத்தின் 'இறுதி' காண்கின்றாள்.

இத்தகைய ஆனந்த அதிசயம் ஜொலிக்கின்ற சீதை திருமுகத்தை அப்படியே கண்டு காட்டுகின்றது,

திருவின் முகத்துத்
திரு அன்னாள்

என்னும் சொற்றொடர்.

பாக்கியசாலியும் கட்டழகியுமான ஒரு பெண்ணின் முகத்திலே 'மகாலட்சுமி குடி கொள்கிறாள்' என்று கூறுவதுண்டு. அந்த மகாலட்சுமியின் அத்தகைய ஜீவகளையையும் அழகுச் செல்வத்தையும் வருணிக்க வேண்டுமென்றால், 'இந்தச் சீதாலட்சுமி குடிகொள்கிறாள் அந்த மகாலட்சுமியின் முகத்திலே?' என்று தான் சொல்ல வேண்டுமாம். 'திருவளர் கவிதை' யென்று சொல்லலாம், கவிதை யுலகின் வரம்பாகக் காட்டத் தக்க இம் முழுப்பாட்டையும்.

பண்ணைக்கும் பண்ணையாள்

இவ்வண்ணம் ஆனந்த அதிசய சிகரத்திலே நிற்கும் பெரியாளைப் பெரியோன் அடி வணங்கி ஒரு பெண் போல் நாணிச் சிரங் குனிந்து சில வார்த்தைகள் கூறுகின்றான் :

அண்ணற் பெரியோன்
அடிவணங்கி, அறிய
உரைப்பான்: 'அருந்ததியே,

வண்ணக் கடலின்
இடைக்கிடந்த மணலிற்
பலரால் வானரங்கள்

எண்ணற் கரிய
படைத்தலைவர் இராமற்(கு)
அடியார் ; யான்அவர்தம்



பண்ணைக்(கு) ஒருவன்
எனப்போந்தேன்; ஏவற் -
கூவற் பணிசெய்வேன்!'

[அருந்ததியே - அருந்ததிக்கு ஒப்பான கற்பின் செல்வியே. வண்ணக் கடலினிடை - அழகிய கடலில். மணலில் பலர் - மணலினும் பலராவர். வானரங்கள் எண்ணற் கரிய படைத் தலைவர் - எண்ணுதற்கு அரிய வானரங்களின் படைத் தலைவர். ஏவல் கூவல் பணி செய்வேன் - ஏவின வேலையையும் செய்வேன்; கூவின சத்தத்திற்கும் போய்ப் பணி செய்வேன்.]

இத்தகைய பெரும்பணிவுடன் அனுமன் மறுக்கின்றான்,

இவனே எங்கோன்
துணை என்றால்

என்று சீதை வெளியிட்ட அந்த அபிப்பிராயத்தை.

ராமபிரானுக்குத் துணைவன் என்று சீதை சொல்ல, அனுமனே அதை மறுத்துத் தன்னைப் 'பண்ணைக்கு ஒருவன்' என்றும், 'ஏவற் கூவற் பணிசெய்வேன்' என்றும் தெரிவித்துக் கொள்ளும் இந்தப் பணிவிலேயே 'அண்ணற் பெரியோ'னின் பெருமை உள்ளபடியே வெளிப்படுகிற தல்லவா?

பெருந்திரளும் பெருந்திறனும்

ராமபிரானது அந்தப் பண்ணையின் பரப்பை எழுபது வெள்ளம் என்னும் தொகையால் குறிப்பிட்ட பின்பு, அந்த வீரர் திரள் இந்தத் தென் கடலை ஒரு தடையாகக் கருதப் போவதில்லை என்பதை வற்புறுத்துகிறான். பிறகு

கள்ள அரக்கர்
கடிஇலங்கை காணு -
தொழிந்த தாலன்றோ,
உள்ள துணையும்
உளதாவது?

[கடி இலங்கை - காவலையுடைய இலங்கை நகரம். உள்ள துணையும் உளதாவது - இந்நாள் மட்டும் அழியாமலிருக்கிறது.]

என்று மேலும் வற்புறுத்துகின்றான் அந்த வீரர்களின் பேராற்றலை.

கடைசியாக வானரப் படைத் தலைவர்களின் பெயர்களைச் சொல்லிக் காட்டுகிறான். அவர்களில் சுக்கிரீவனை முதன் முதல் குறிப்பிடுகிறான், வாலி தம்பி என்று.

அடுத்தபடியாக வாலி மைந்தனாகிய அங்கதனைக் குறிப்பிடுகிறான். பிறகு வேறு வானர வீரர்களின் பெயர்கள்.

நீல நிறமுள்ள வானரன், ஆம்பல் நிறமுள்ள வானரன், புகை நிறமுள்ளவன், தயிர் நிறமுள்ளவன், சங்கு நிறமுள்ளவன், காட்டுப் பசு, காளை மாடு போன்றவர், சிங்கத்தைக் கொல்லும் சரபம் போன்றவன், கோபக்காரன், வணக்கமுள்ளவன், ஸ்தம்பம் போன்றவன் என்றெல்லாம் விநோதமாகப் பொருள் படும் பெயர்களை அடுக்கிக் கொண்டே போகிறான் அனுமன்.

இந்த வானரப் பெயர்கள் கரடி ஜாம்பவானையும் இடையே இழுத்துக் கொண்டு எப்படித் தமிழிசையோடு இசையாக வருகின்றன பாருங்கள்:

வாலி இளவல்
அவன்மைந்தன், மயிந்தன்
துமிந்தன், வயக்குமுதன்,
நீலன், இடபன்,
குமுதாக்கன், பனசன்,
சரபன், நெடுஞ்சாம்பன்,
காலன் அனைய
துன்மருடன், காம்பன்,
கவயன், கவயாக்கன்,
ஞாலம் அறியும்
நற்சங்கன், வினதன்,
துவிந்தன். நளன்என்பான்.

[இளவல் - தம்பி. வயக் குமுதன் - வெற்றியுள்ள குமுதன். இடபன் - ருஷபன். நெடுஞ்சாம்பன் - பெரிய ஜாம்பவான். ஞாலம் - உலகம்.]


இன்னும் நாலு பெயர்களையும் இசைத்துக் கொண்டு, வானரப் படைத்தலைவர்களின் வலிமையையும் பக்தியையும் பதிய வைக்கிறான்:

தம்பன், தூமத்
தனிப்பேரோன், ததியின்
வதனன், சதவலியென்(று)
இம்பர் உலகோ(டு)
எவ்வுலகும் எடுக்கும்
மிடுக்கர், இராமன்கை
அம்பின் உதவும்
படைத்தலைவர்.

[ததியின் வதனன் - ததிமுகன். இம்பர் உலகோடு - இவ்வுலகத்தோடு. மிடுக்கர் - வலிமையுள்ளவர்.]

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூளாமணியும்



18. சொல்லின் செல்வனுக்குத் தோல்வி!

இருவரும் மகிழ்ச்சி யுற்றார். வானரப் பெரு வெள்ளத்தின் பரப்பையும் மிடுக்கையும் எவ்வளவு பிரமாதமாக வருணித்து விட்டது அனுமனுடைய மகிழ்ச்சி! சீதையோ மகிழ்ச்சிப் பேரலையின் உச்சிக்கே ஏறிவிட்டாள். ஆனால் அந்தப் பேரலையை அடுத்துக் கீழே?

ஒரு மின்னலுணர்வு

இப்போது மகிழ்ச்சியின் விசுவரூபத்தையும் அடக்கிக்கொண்டு அனுமன் ஆலோசனையில் ஆழ்கின்றான். சீதையின் எதார்த்த நிலை என்ன? இன்னும் துன்பப் பெரு நிலைதானே?

துன்பம் இரக்கத்தைத் தூண்டுகிறது. அதுவும் ஓர் அபலை அனுபவிக்கும் துன்பமென்றால்? அந்த அபலையும் ஒரு கட்டழகி யென்றால்?

மிதமிஞ்சிய இரக்கம், எந்த நிலையை உண்மையாகப் பார்க்க விரும்புகிறதோ அந்த நிலையைத் தெளிவாகப் பார்க்க விடாமலே அறிவுக் கண்ணைப் பொத்தி விடுவதும் உண்டு.

கணையாழி காட்டி விசுவரூபமும் காட்டிச் சீதைக்கு ஆறுதலோடு மகிழ்ச்சியின் சிகரத்தையும் காட்டிய அனுமன், 'இனி என் செய்வது?' என்று தான் ஆலோசிக்கிறான்.

அவளை இப்போது பார்த்ததும், 'உண்டா ஒப்பு உலகத்திலே? என்ன அதிசயம்!' என்று தோன்றுகிறது. அழகிற்கும் ஒப்பு இல்லை; துன்பத்திற்கும் ஒப்பு இல்லையே — அழகு எவ்வளவோ அவ்வளவு துன்பம்!

அந்த உயிரல்லவா இங்கே இந்தக் கோலத்தில் இருக்கிறது? அங்கே உடம்பு, இங்கே உயிர் — என்ன விபரீதம்!

இதற்கிடையே பளிச்சென்று தெரிகிறது ஒரு குறுக்கு வழி. மின்னிடுகின்றது ஓர் உணர்வு. 'இந்த உயிரை அங்கே சேர்த்து விட வேண்டும்' என்பதுதான் அது;

'உண்டுதுணை என்னஎளி -
தோஉலகில்? அம்மா!
புண்டரிகை போலும் இவள்
இன்னல்புரி கின்றாள்!
அண்டமுதல் நாயகன(து)
ஆவிஅனை யாளைக்
கொண்டகல்வ தேகருமம்'
என்றுணர்வு கொண்டான்.

[துணை - ஒப்பு. அம்மா — ஆச்சரியம். புண்டரிகை — மகாலட்சுமி. இன்னல் - துன்பம். அண்டம் முதல் நாயகன் - உலகங்களுக்கெல்லாம் முதல் தலைவனான நாயகன். ஆவி அனையாள் — உயிர் போன்றவள். கருமம் — (இப்போது செய்ய வேண்டிய) செயல்.]

இந்த உணர்வை இப்படி ஒரே கவியில் சொல்லி விடும் கவிஞன், இதை வெளியிடும் சொல்லின் செல்வனுடைய சொற்களை ஒன்பது கவிகளில் உரைத்துக் காட்டுகிறான். ஆம்; மின்வெட்டுவதுபோல் உணர்வு பளிச்சென்று உருவாகக் கூடும். ஆனால் உணர்வைத் தக்க

படியே உணர்த்தும் திறன் பாஷைக்கு இல்லையே; ஆங்கிலக் கவிஞன் கூறுவது போல, மனித மொழி மயங்க வைக்க வும் கூடுமே!

உணர்வு மின்னி விட்டது. ஆனால் சீதைக்கு உணர்த்த வேண்டுமே! ஐயத் திற்கே இரையாக இருந்த உள்ளத்தில் இப்போதுதானே நம்பிக்கை இளஞ் சுடர் வீசி எழுகின்றது? மறுபடியும் ஐயம் வந்து விட்டால் வந்து விடுமே மோசம்!

இப்படிப்பட்ட நெருக்கடியிலும் தன் வாக்கு வன்மை முன்போல் உதவு மென்றே நம்புகிறான் சொல்லின் செல் வன்.

கேட்டிஅடி யேன்உரை ;
முனிந்தருளல்

[கேட்டி – கேட்பாயாக. முனிந்தரு ளல் - கோபிக்க வேண்டாம்.]

என்னும் பீடிகையோடு தொடங்கும் விண்ணப்பம் எவ்வளவு விநயமாகவும் சாதுரியமாகவும் வெளிப்படுகிறது!

'காரியம் பெரிதா, வீரியம் பெரிதா?' — 'ராவணனை வெல்வது காரியமன்று; ராமனெதிரே உன்னைக் காட்டுவதுதான் இப்போது செய்ய வேண்டிய காரியம்' என்று முதன் முதல் தன் கருத்தைச் சுருக்கமாய்த் தெரிவிக்கிறான்.

பேச்சு வளர்கின்றது

'இதோ பாரம்மா, இப்பொழுதே உன்னை ராமனிடம் கொண்டு போய்க் காட்டி விடுகிறேன். இதுவே தக்க தருணம்' என்று அனுமன் தானும் துரி தப்பட்டுச் சீதையையும் துரிதப்படுத்து வதுபோல் அமைந்திருக்கிறது செய்யு ளின் போக்கு:

நீட்டிஇனி என்பல ?
இராமன்எதிர் நின்னைக்
காட்டி,அடி தாழ்வென்,இது
காண்டி,இது காலம் !

[நீட்டி – நீளப் பேசி. என் –என்ன (பயன்). பல – பல சொற்களை. தாழ் வென் – தாழ்ந்து வணங்குவேன். இது – இந்த என் செய்கையை. காண்டி – காண்பாயாக.]

சீதையை ராமனுக்குக் காணிக்கை யாகக் காட்டித் தன்னையும் பாத காணிக் கையாக விரைவில் ஒப்புவித்து விட வேண்டும் என்ற பக்த குதூகலத்தின் துடிப்பைக் காண்கின்றோம் இந்த விண் ணப்ப முகப்பிலே.

உபாயமோ மிகவும் சுலபமானது என்கிறான். தோள்மேல் ஏறிக்கொள்ள வேண்டியதுதான்: அப்பால் அவளுக் குக் கவலையே வேண்டாம். மெத்தை மேல் உறங்குகிறவர்களைப் போல் இனி மையாக உறங்கிக் கொள்ளலாம் என்று கூடச் சொல்லத் துணிகிறான்.

ஆனால் அந்த உறக்கத்திற்கு ஒரே ஒரு இடையூறு. நொடிப் பொழுதில் ராம னிருக்கும் மலையில் குதித்து விடுவானும். 'ஆகவே நீ உறங்க முடியாதம்மா!' என் பது குறிப்பு.

களங்கமற்ற இந்த ஹாஸ்யம் கூட அவள் கவலைகளை ஊதித் தள்ளிவிடும் என்பது போல் ஓர் உணர்வும் தொனிக் கின்றது:

பொன்திணி பொலங்கொடி !என்
மென்மயிர் பொருந்தித்
துன்றிய புயத்(து)இனி(து)
இருக்க, துயர்விட்டாய்,
இன்துயில் விளைக்க !ஓர்
இமைப்பின், இறைவைகும்
குன்றிடை உனைக்கொடு
குதிப்பென், இடைகொள்ளேன்.

[பொன்திணி – பொன்மயமான. பொலங்கொடி – அழகிய பூங்கொடி போன்றவளே. துன்றிய – நெருங்கிய. புயத்து – தோள்களின் மேல். இனிது இருக்க – இனிமையாக ஏறி யிருந்து. துயர்விட்டாய் – துயரத்தை விட்டவ ளாய். இன்துயில் விளைக்க – இனிமை யான தூக்கத்தையும் விளைத்துக் கொள் வாயாக. ஓர் இமைப்பின்–இமை கொட் டும் ஒரு நொடிப் பொழுதில். இறை – தலைவனாகிய ராமன். வைகும் – தங்கி யிருக்கும். குன்றிடை – குன்றிலே. இடை கொள்ளேன் – நடுவழியில் எங் கும் தங்க மாட்டேன்.]

இடையூறு ஏற்படாதோ என்றால், அந்தப் படுவேகத்தை அரக்கர்களால் அறிந்து கொள்ளத்தான் முடியுமா? அறிந்து கொண்டபோதிலும் பின் தொடர்ந்து வர முடியுமா? தொடர்ந்து வர அவ்வளவு பைத்தியமா?

அப்படி வரக்கூடிய ஆண்பிள்ளைகள் இங்கே உண்டென்றால் சரி, வந்து பார்க்கட்டும்:





36

அந்த மானக்கேட்டைப் பிறர் கேளாதபடி ஜாக்கிரதையாக அவன் காதிற்கு அருகே போய்த் தானே சொல்ல வேண்டி யிருக்கும் என்று கூடச் சொல்லுகிறான்:

அருந்ததி, உரைத்தி : அழ—
கற்(கு)அருகு சென்றுன்,
மருந்தனைய தேவி,நெடு
வஞ்சர்சிறை வைப்பில்,
பெருந்துயரி னோடும்,ஒரு
வீடுபெறல் இல்லாள்
இருந்தனள்!' எனப்பகரின்,
என்அடிமை என்னும் ?

அருந்ததி–அருந்ததி போன்ற சீதையே. உரைத்தி –நீயே சொல்வாயாக. அழகற்கு – அழகனாகிய ராமனுக்கு. மருந்து அனைய – (இங்கே) அமிர்தம் போன்ற. நெடுவஞ்சர் – மிக்க வஞ்சனையுடைய அரக்கர்கள். சிறை வைப்பு – சிறைச்சாலை. வீடு – விடுதலை. பெறல் – பெறுதல். பகரின் – சொல்வேனாயின். அடிமை – கைங்கரியமாகச் செய்யும் அடிமைத் தொழில். என் ஆம் – என்ன பயனைத் தரும்.]

இந்த வினவிலேயே தன் புதிய உணர்வினுக்கு வெற்றி நெருங்கி விட்டதாகவே அனுமன் நம்புகிறான். விடையை எதிர்பாராமலே மேலும் சொல்லுகிறான்:

புண்தொடர்(வு) அகற்றிய
புயத்தினொடு புக்கேன்,
அறிந்(து) இடை அரக்கர் தொடர்
வார்கள்உள ராமேல்,
முறிந்(து)உதிர நூறி,எதிர்
என்சினம் முடிப்பேன் !

[இடை – நடு வழியில். உளராமேல் – உண்டு என்றால். நூறி – அழிந்து.]

மேலும் சொல்லுகிறான் சொல்லின் செல்வன். 'நான் மட்டும் திரும்பிப் போய் ராமபிரானிடம் என்னதான் சொல்வது ? "உன் தேவி கொடிய வஞ்சர்களுடைய சிறைச்சாலையில் பெருந்துயருடன் விடுதலைக்கு வழிபெறாமலே இருக்கிறாள்" என்று தானே செய்தி சொல்ல வேண்டும் ?'

விண்டவர் வலத்தையும்
விரித்(து)உரை செய்கேனோ ?
'கொண்டுவரு கிற்றிலென்,
உயிர்க்(கு)உறுதி கொண்டேன்;
கண்டுவரு கிற்றிலென்!'
எனக்கழறு கேனோ ?

[புண் தொடர்வு – புண் படுவது. பயத்திறெடு – தோள்களுடனும். புக்கேன் – சென்றவனாய். விண்டவர் –பகைவர்கள் வலம்–பலம். வருகிற்றிலென் – வந்தேனில்லை. கழறுகேனோ – சொல்வேனோ.]

வெறுங் கையை வீசிக் கொண்டு போனால் புண் படாமல் தானிருக்கும்; அப்படி அங்கே போய் என்ன தான் சொல்ல இருக்கிறது? இந்தப் பகைவர்களுடைய வலிமையைக் குறித்துத் தானே விரிவுரை நிகழ்த்த வேண்டியிருக்கும் ?

சொல்லின் செல்வத்தை இப்படியா செலவழிப்பது? அல்லது வேறு விதமாகச் சொற்பொழிவு செய்யவேண்டுமா? அதாவது 'சீதையைக் கொண்டு வர முடியவில்லை, என் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வடுப் படாத முழு உடம்போடு ஓடி வந்து விட்டேன், இதோ பார் ஐயா!' என்று அனுமன் தன்னுடைய சாமர்த்தியத்தை விளம்பரப்படுத்தப் போகிறானா?

'அல்லது கண்டு வரவே முடியவில்லை என்று ஒரே அடியாய்ச் சாதித்து விடுவேனா?' என்று கேட்கிறான். சீதையைத் தான். அந்தக்கேள்விக்குஅவளால் விடை கூற இயலாது; எனவே நம் தர்க்க வாதத்திற்கு வெற்றி தான் என்று அனுமன் கருதுவது போலக் காண்கிறது .

இந்தச் சந்தர்ப்பத்திலே 'ஊர் தேடு படல'த்தில் அனுமனின் தனிமையுரையாக வருகின்ற பின் வரும் கவிதை அடிகளை நினைப் பூட்டிக் கொள்ளலாம் :

'கண்டுவரும்' என்றிருக்கும்
காகுத்தன் ; கவிகுலக்கோன்,
'கொண்டுவரும்' என்றிருக்கும்;
யான் இழைத்த கோள்இதுவால்!

[காகுத்தன்–ராமன். கவிகுலக்கோன்– வானர மகாராஜாவான சுக்கிரீவன். கோள் – செய்கை. ஆல் – அசை.]

அப்போது நினைத்தான்: ராமனோ "கண்டுவரும்" என்றிருப்பான்; நமது சுக்கிரீவ மகாராஜாவோ ராமபிரானைக் காட்டிலும் என்னை நன்றாக அறிந்திருப்பவராதலால், 'சீதாதேவியைக் கொண்டு வந்தே விடுவான்!' என்று கருதி யிருப்பான்.

இப்போதோ கொண்டு வர இயலாத சாமர்த்தியத்தை விளம்பரப் படுத்திக் கொள்வதா? அல்லது காணவே யில்லை என்று துணிந்து பொய் சொல்லி விடுவதா? — இந்தப் பிரசினை அனுமனுக்கு.

கடைசியாக வேறொரு முக்கிய காரணமும் சொல்லுகிறான், சீதையைக் கொண்டு போக வேண்டும் என்பதற்கு: 'உன்னைக் கண்டதும் ராமனுக்குத் துயரம் தீர்ந்து மனத் தெளிவு உண்டாகும் ; பின்பு குதூகலம் பொங்க இங்கு வந்து துஷ்ட நிக்கிரகம் செய்வான்!'

இவ்வளவு தர்க்க வாதத்திற்கும் மேலாகச் சொல்ல வேண்டியது ஒன்றுமே இல்லையென்பது அனுமன் துணிவு. அவளால் ஆட்சேபிக்க முடியாது, ஆட்சேபிக்கவும் மாட்டாள் என்பது அனுமன் நினைவு.

இந்த நிலையில் அனுமனின் விண்ணப்ப முடிவுரையும் விநயச் செயலும் நிகழ்வதைக் காணலாம் :


'வேறினி விளம்பஉள –
தன்று;விதி யால் இப்
பேறுபெற என்கண்அருள்
தந்தருளு ; பின்போய்
ஆறுதுயர் ; அஞ்சொல்இள
வஞ்சி! அடி யென்தோள்
ஏறு கடி(து)' என்று தொழு(து)
இன்னடிப ணிந்தான்.

[வேறு இனி விளம்ப உளது அன்று- இனி வேறொன்றும் சொல்வதற்கில்லை; நீயும் ஆட்சேபம் சொல்லத் தக்கதன்று, என் கண் — என்னிடத்தில். அருள் தந்தருளு — கிருபை செய்தருள்வாயாக. பின் — நான் அங்கே கொண்டு போய் விட்ட பின்பு. போய் — ராமபிரானிடம் போய். ஆறு துயர் — துயரம் ஆறுவாயாக. அஞ்சொல் இளவஞ்சி — அழகிய சொற்களையுடைய இளம் பெண்ணே. கடிது — விரைவில். இன்னடி — இனிய திருவடிகள்.]

சொல்லின் செல்வனின் இந்தக் காரியப் பேச்சு முற்றும் தோல்வி அடைகின்றது. அனுமனுக்கு எதிர் பாராத தோல்விதான். இந்தத் தோல்வி இல்லையென்றால், ராமாயணப் போக்கே மாறு பட்டிருக்குமல்லவா ?

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூளாமணியும்




19. இரு வேறு கவியுலகு

பி.ஸ்ரீ

ஸ்ரீ ராம சரித்திரத்தை வால்மீகி மாமுனிவர் ஸம்ஸ்கிருத பாஷையில் இயற்றியிருக்கிறாரே, அந்த மொழியில் பழக்கமில்லாதவர்களா ராமாயணம் படிக்க இயலாதவர்களாயிருக்கிறார்களே என்று சில பண்டிதர்கள் சமீப காலத்தில் ஸ்ரீ வால்மீகியின் கிரந்தத்தைத் தமிழாக்கி வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களில் கலைக் கடலாகிய உயர் திருவாளர் சி. ஆர். ஸ்ரீநிவாஸையங்கார் பல வியாக்கியானங்களைத் தழுவி விரிவான குறிப்புக்களுடன் ஆதி காவியத்திற்குத் தமிழாக்கம் தந்திருக்கிறார்.

இந்தத் தமிழாக்கத்தின் உதவி கொண்டு வால்மீகியையும் கம்பனையும் ஒப்பிட்டுப் பார்க்கிறவர்களும், 'வால்மீகி ஒரு கலா சிருஷ்டி; கம்பன் வேறொரு புத்தப் புதிய சிருஷ்டியாகிய கவிதை யுலகம்' என்பதை ஒப்புக்கொள்வார்கள்.

நாம் இப்போது சஞ்சாரம் செய்து வரும் சுந்தர காண்டத்திலேதான் எத்தனை வேற்றுமைகள் ஆதிகாவியத்திற்கும் தமிழ்ப் பெருங் காவ்யத்திற்கும் இடையே! கம்பன் தனக்கே சிறப்பாக உரிய நாடகத் திறனுடன் அமைத்து வரும் ஒவ்வொரு கட்டத்திலும் மாறுபடுகின்றான் என்பதை நமது வாசகர்கள் நன்கறிவார்கள்.



சுந்தர காண்டத்திலே உயிர் நிலையாகிய கட்டங்கள் கணையாழி கொடுப்பதும், சூடாமணி பெறுவது மல்லவா? இவற்றுள் அனுமன் கணையாழி கொடுக்கும் முப்பத்தாறுவது ஸர்க்கத்தைக் கம்ப சித்திரத்துடன் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தாலும் போதுமே, இந்த இரண்டு பேரிதிகாசங்களும் இரு வேறு கவியுலகம் என்பதைக் கலா ரஸிகர்கள் நன்குணர்வதற்கு.


அந்தச் சித்திரத்தையும் பாருங்கள்; இந்தச் சித்திரத்தையும் பாருங்கள். 'எல்லாம் ஒன்றே' என்ற அபேத அத்வைத ஞானம் கலையுலகில் அவ்வளவு பயன் தரத் தக்கதன்று. ஒரே ராமாயணக் கதை இரு வேறு காவிய உலகங்களில் நடைபெறக் காண்கிறோம்.

வால்மீகியின் கதைப் போக்கு

இந்தப் பீடிகையுடன், இனி அனுமன் சீதையைத் தன்னுடன் வருமாறு பிரார்த்திப்பது குறித்து வால்மீகி என்ன சொல்கிறாரென்று பார்க்கலாம். முப்பத்தேழாவது ஸர்க்கத்தின் ஸாரமான சுருக்கத்தை இங்கே தர முயல்வோம்.

இயன்ற வரையில் வால்மீகியின் இதயத்தை உள்ளபடியே உணர்ந்து கொள்ள முயன்றிருக்கும் திரு சி. ஆர். ஸ்ரீநிவாஸையங்காரைப் பின்பற்றுவதாக உத்தேசம்.

'இந்திரனுடைய மகிமையை இந்திராணி அறிவது போல் அவருடைய மகிமை எனக்கல்லவா தெரியும்? ராமன் என்னும் கதிரவன் அம்புக் கூட்டமாகிய கதிர்களால் அரக்கர் என்னும் நீர்ப் பரப்பை அதிவிரைவில் வற்றச் செய்



வார்' என்று சீதை கண்ணீர் பெருக உள்ளத்தில் துயரம் ததும்பப் பரிதவித்தாள். அதற்கு உடனே அநுமன், 'தாயே, ஏன் கவலைப்படுகிறீர்கள்? தங்களுடைய விருத்தாந்தத்தை நான் தெரிவித்ததும் அவர் கணக்கில்லாத வானரப் படைகளுடன் இங்கே வருவார்' என்று பதில் சொன்னான்.

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இதற்குத் தொடர்ச்சியாக, 'அவ்வளவென்ன? தங்கள் துயரத்தை இந்தக் கணமே போக்கடிக்கிறேன். என் முதுகில் ஏறிக் கொள்ளுங்கள். ஒரு நொடியில் இந்தக் கடலைத் தாண்டித் தங்களைக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன். ஐயம் வேண்டாம்' என்றான். இதனுடன், கம்பனுடைய அநுமனுக்கு 'உணர்வு' தோன்றுவதை ஒப்பிட்டுப் பாருங்கள்.

கம்பனும் ஆதிகாவியமும்

இங்கே ஆனந்த சிகரத்தில் நிற்கும் இருவரும் சற்று மௌனமாயிருக்கிறார்கள். அநுமனும் மௌனமாகச் சீதையை நோக்குகிறான். 'அழகைப் போல் துன்பம்; துன்பத்தைப் போல் அழகு' என்ற அந்தத் தோற்றத்திலிருந்தும், 'இதல்லவா அவனுடைய உயிர்?' என்ற அந்த நினைப்பிலிருந்தும், இந்த உயிரை அந்த உடலோடு சேர்த்து விட வேண்டியதுதான் என்னும் உணர்வு உதயமாகிறது.


இது கம்ப நாடகம். அது பேச்சினிடையே கதை சொல்லும் கலையாக விளைகின்றது. இரண்டும் இரு வேறு சிருஷ்டிகள் — இல்லையா? மேலே போகலாமா?

அநுமன் பேசிக் கொண்டே போனான். ஹோமஞ் செய்கிற பொருள்களை நெருப்புக் கடவுள் இந்திரனிடம் சமர்ப்பிப்பது போல் அநுமன் ராமனிடம் சீதையைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவதாகத் தெரிவித்தான். 'ஆகையால் என் முதுகில் ஏறுங்கள்; ஆகாய வீதியில் உன்னதமாய்ச் செல்லுங்கள், சூரிய சந்திரருடன் உரையாடுவது போல!' என்றான் உத்ஸாகமாக. இது ஆரணிய — ஆசிரம மனோபாவம்.

'ராமபிரானுடன் சேர்ந்திருக்க விரும்புங்கள்' என்று அந்த ஆசையையும் உண்டாக்கினான். 'இந்த இலங்கை வாசிகள் ஒன்று சேர்ந்தாலும் என்னைத்



தடுக்கவாவது, பின் தொடரவாவது இயலுமோ? நான் இங்கே எப்படி அலட்சியமாக வந்தேனோ அப்படியே தங்களை எடுத்துச் செல்வேன்' என்று தன் பேராற்றலையும் வற்புறுத்தித் தைரியப்படுத்தினான். இவ்வளவுதான் வால்மீகி தருகின்ற செய்தி.



கல்லிலிருந்து சிலை பிறப்பது போல் அல்லவா பிறக்கின்றது. கம்பன் பத்துப் பாடல்களால் உருவாக்குகின்ற கட்டம்? மேலும் பார்ப்போம், வால்மீகியின் கதைப் போக்கினை.

இந்த ஆச்சரியமான வார்த்தையைக் கேட்டுச் சீதை மகிழ்ச்சியால் மயிர்க் கூச்செறிந்தாள். 'கடல் தாண்டிக் கிஷ்கிந்தைக்கு என்னைக் கொண்டு போகிறேனென்று அற்பமான சரீரத்தையுடைய நீ சொல்வது விநோதம் தான்; உன்னுடைய சுபாவமான வானர புத்தி தான்!' என்றாள்.

இது கேட்ட அநுமன், 'என்ன அதிசயம்! நான் இப்படி ஒருவரிடத்திலும் அவமானப்பட்டதில்லை' என்று எண்ணினான். இப்போதுதான் அநுமன் சீதைக்கு விசுவரூபம் காட்டினான் என்பது வால்மீகம்.

கம்ப ராமாயணத்திலே விசுவரூபத்தைச் சீதை ஏற்கெனவே பார்த்து விட்டாள். அநுமனது காரியப் பேச்சுக்குச் சற்றும் உடன்பட இயலாத நிலையில் இப்போது இருக்கிறாள்.

அநுமனின் வார்த்தைக்கு உடன்படாத இந்த நிலையிலும், 'இப்படி நாம் அவமானப்பட்டோமே' என்னும் உணர்ச்சி கொஞ்சமும் இந்த மகோபகாரிக்கு ஏற்படாதபடி அவ்வளவு ஜாக்கிரதையாகப் பேச முயல்கிறாள் சீதை என்பது கம்ப சித்திரம்.

மழைத் துளிகள்

எவ்வளவோ பக்தி விசுவாசமுள்ள மகோபகாரியை எவ்விதமாய்க் கண்டித்துப் பேசுவது? விநய சம்பத்திலே—நாகரிகப் பண்பாட்டிலே—எவ்வளவு பக்குவமாகப் போட்டி போடுகிறாள் அநுமனுடன்!

ஏய நன்மொழி
எய்தவி ளம்பிய

தாயின் முன்னிய
  கன்றனை யான்தனை,
‘ஆய நன்மை
  அரியதன் றும்’ எனத்
தூய மென்சொல்
  இனையன சொல்லுவாள்.

[ஏய—இசைந்த. நன்மொழி—நல்ல சொற்களை. எய்த விளம்பிய—பொருந்தக் கூறிய. தாயின் முன்னிய—தாய்ப் பசுவுக்கு முன்பு போய் நின்ற. கன்று அனையான்தனை — கன்றை ஒத்த அனுமனை நோக்கி. ஆய தன்மை — அவன் சொன்ன அப்படிப்பட்ட காரியம். அரியதன்று ஆய் — இவனுக்குச் செயற்கருஞ் செயல் அல்ல. என — என்று நினைத்து. தூய மென் சொல்—களங்கமற்ற மென்மையான சொற்கள். இனையன — இத்தன்மையன.]

சின்னஞ் சிறு மழைத் துளிகள் விழுவது போல வந்து செவியில் விழும் சொற்களைக் கவனமாகக் கேளுங்கள்:

அரிய(து) அன்று; நின்
  ஆற்றலுக்(கு) ஏற்றதே;
தெரிய எண்ணினை:
  செய்வதும் செய்தியே!
உரிய(து) அன்(று)என
  ஓர்கின்ற(து) உண்(டு);
      அ(து)என்
பெரிய பேதைமைச்
  சின்மதிப் பெண்மையால்.

[செய்தியே—செய்தே முடிப்பாய். ஓர்கின்றது – ஆலோசிக்கின்றது. சின்மதி –சிற்றறிவு.]

துளி துளியாக மெள்ளத் தூற்றுவது போலத் தொடங்கும் மழை உடனே அடைசட்டி மழையாகிறது. விரைவில் கடுங் காற்றும் மின்னலுமாகிக் கோடை இடிக் குரலில் விதியின் மகத்தான சங்கற்பத்தை வெளியிடப் போகிறது.

ஆனால் இந்தக் கம்ப சித்திரத்தை உற்று நோக்குவதற்கு முன் வால்மீகியின் கதைப் போக்கைத் தொடர்ந்து பார்க்க வேண்டும்.

வால்மீகியின் சீதை

அனுமன் தன் விசுவரூபத்தைக் காட்டியதுடன் அதே பயங்கர ரூபத்தில் வாய் திறந்து, ‘அன்னையே, இந்த இலங்கையை இதிலுள்ள மலைகள் காடுகள் கட்டிடங்கள் பிராணிகளுடனும், அதிபதியான லங்கேசனுடனும் துரும்பு போல் தூக்கிச் செல்ல எனக்குப் பேராற்றலுண்டு. ஆகையால் என்னை அலட்சியம் செய்யாமல் ராம லட்சுமணரின் துயரத்தைப் போக்குங்கள்' என்று வேண்டினான்.

அந்தப் பிரளயகால ருத்திர சொரூபத்தைச் சீதை குளிரக் கடாட்சித்தாள். ‘வானர சிரேஷ்டனே, இந்தப் பெருங் கடலைத் தாண்டிக் கோர ராட்சஸர்களால் நிறைந்த இந்த இலங்கையில் வேறு யாரே இப்படிப் பிரவேசித்து என்னுடன் உரையாட வல்லவர்? அதனாலேயே என்னை எடுத்துச் செல்லவும் நீ வல்லவன்தான் என்பதும் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் நான் உன்னுடன் போவது யுக்தமல்ல' என்றாள்.

காரணமும் சொன்னாள்: அனுமன் செல்லும் வேகத்தால் தான் பிரக்ஞை இழந்து விடக் கூடுமே என்றாள், முதன் முதல். தானே அஞ்சிக் கடலில் விழுந்து விடவும் கூடுமே!


அரக்கர்கள் அனுமனைத் தொடர்ந்து போய்ப் போரிடும் போது, அவர்களை நாசம் செய்வதும், தற்காப்பும், சீதையின் பாதுகாப்பும் ஆகிய மூன்று நிகழ்ச்சிகளும் ஒரே காலத்தில் நிகழ முடியுமா என்று கேட்டாள்.

இந்த ரீதியில் பேசிவரும் சீதை, அனுமனுடைய திட்டம் நிறைவேறினாலும் அது ராம கீர்த்திக்குக் குறைவு என்றும் சொன்னாள். ‘ராவணனை எதிர்க்கத் தைரியமில்லாமல் திருட்டுத் தனமாய் ஒரு குரங்கால் ராமபிரான் என்னை எடுத்து வரச் சொன்னார் என்று உலகம் சொல்லுமே' என்றாள்.

இப்படியெல்லாம் சொல்லி விட்டு, ‘நான் அவரைத் தவிர வேறு புருஷனைத் தொடுவது நியாயமில்லை' என்றும் சொன்னாள். ராவணன் தொட்டெடுத்தது வரவில்லையா என்றால், தன்னால் இயன்ற வரையில் தடுத்துப் பார்த்ததாகச் சொன்னாள். சொல்லி, ராம லட்சுமணரையும் சுக்கிரீவனையும் வானர சைனியங்களையும் விரைவில் இங்கே அழைத்து வா என்றாள். அப்படி அழைத்து வந்தால், பேருபகாரியாவான் அனுமன் என்று கூறி முடித்தாள்.

இனி, நாம் கம்ப ராமாயணத்திலே சீதை அனுமன் வார்த்தையை மறுத்துரைக்கும் கட்டத்தைக் கவனிப்போம்.

கணையாழியும் சூளாமணியும்



பி.ஸ்ரீ

20. விதியின் இடிக்குரல்

அனுமன் சீதையைத் தூக்கிக் கொண்டு போவதானால், ஆயுதபாணிகளாகத் தொடர்ந்து வந்து வழி மறிக்கும் அரக்கர்களை வதஞ் செய்ய வேண்டியிருக்குமே. அப்போது சீதைக்கு யாதொரு தீங்கும் நேரிடாதபடி காப்பாற்றுவ தெப்படி? இந்தக் கேள்வி வால்மீகத்தில் காணப்படுவது போல் கம்பனிலும் காணப்படுகிறது.

ஒற்றுமை, வேற்றுமைகள்

பிறகு, பிறருக்குத் தெரியாமல் தன்னைத் தூக்கிக் கொண்டு போவது ராவணனுடைய வஞ்சனைத் தொழிலைப் பின்பற்றுவதே யாகும் என்கிறாள். இது ராமனுடைய கீர்த்திக்குங் குறைவு என்கிறாள். இந்தக் கருத்தும் வால்மீகத்தில் காணப்படுகிறது.

ராமனைத் தவிர வேறு புருஷனைத் தொடுவது சரியன்று என்ற கருத்தும் வால்மீகத்தில் உள்ளது போல் கம்பனிலும் இருக்கிறது.

எனினும் சீதையின் பேச்சுத் தொடக்கமே கம்ப சித்திரத்தை ஒரு புது மெருகுள்ள சித்திரமாக மட்டுமல்ல, ஒரு புதிய கலைச் சித்திரமாகவும் மாற்றி விடுகிறது.

பேச்சினிடையில் தன்னை வஞ்சித்தவர்களைக் குறித்துப் பிரஸ்தாபிக்கும் போது கோபம் கரை மீறி எழுகின்றது. எனவே தான், 'வஞ்சித்த நாட்களின்—நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ?' என்று கேட்கிறாள்.

கோபம் மேன்மேலும் பொங்குகிறது. ராம லட்சுமணர்கள் வில்லில் நாண் இழுக்கும்போது அரக்கியர் மங்கல நாண் அறுபட்டுப் போகுமென்கிறாள். பொன் மலையாகிய இலங்கை எலும்பு மலையாகி விடுமென்கிறாள். அப்போது தான் தன் கற்புக்கு வெற்றி ஏற்படுமாம்.

இப்படியெல்லாம் சொல்லும்போது ரௌத்திரம் இடிக் குரலில் பேசுகிறது; விதியின் கொடிய சங்கற்பத்தை வெளியிடுவது போலத் தோன்றுகிறது.

ராமபாணங்கள் பறப்பது போலப் புறப்படுகின்றன சொற்கள்:

> அல்லல் மாக்கள்
> இலங்கையொ(டு) ஆகுமோ?
> எல்லை நீத்த
> உலகங்கள் யாவும், என்
> சொல்லினாற்சுடு—
> வேன்! அது தூயவன்
> வில்லின் ஆற்றற்கு
> மாசென்று விசினேன்.

[அல்லல் – துன்பம். மாக்கள் – பகுத்தறிவில்லாமல் மிருகம்போல் வாழ்கிறவர்கள். எல்லை நீத்த – கணக்கில்லாத.]

ராமனுக்காவது வில் வேண்டும்; சீதைக்குச் சொல்லே போதுமாம் சுட்டெரிப்பதற்கு! இச் சந்தர்ப்பத்தில் சிலப்பதிகாரத்தின் காவியநாயகியாகிய அந்த வீர பத்தினியின் நினைவு வருகின்றது.

கணவனை இழந்த கண்ணகி மதுரையைச் சொல்லினால் சுட்டெரித்தாள் என்பது சிலப்பதிகாரக் கதை. 'கணவன் இருக்கிறான் நம்மைக் காப்பாற்றுவதற்கு' என்ற நம்பிக்கையிலிருந்து



பிறந்திருக்கிறது இந்த வாக்கு. அதை நினைவிற் கொண்டு இந்த அடைமொழியிலுள்ள கலைச் சுவை உய்த்துணரத் தக்கது.

ஒரு மறுப்பு

இப்பேர்ப்பட்ட வீர பத்தினியை ராவணன் தீண்டியிருக்க முடியுமா? ராவணன் தொட்டெடுத்து வந்தான் என்னும் வால்மீகி கதை, சீதை வார்த்தையாக வரும் பதினாறு பாடல்களிலே ஆறு பாடல்களினால் மறுக்கப்படுகின்றது.

இம்மறுப்புரையின் பீடிகையாக அமைகிறது இப்பாட்டு :

வேறும் உண்டுரை ;
  கேள்அது;மெய்ம்மையோய்!
ஏறு சேவகன்
  மேனிஅல் லால்,இடை
ஆறும் ஐம்பொறி
  நின்னையும் ஆண்எனக்
கூறும் இவ்வுருத்
  தீண்டுதல் கூடுமோ?

[வேறும் உண்டு உரை – (நீ தூக்கிச் செல்லக் கூடாது என்பதற்கு) உரைக்கத் தக்க வேறொரு காரணமும் உண்டு. மெய்ம்மையோய் – உண்மை நெறியில் இருப்பவனே. ஏறு சேவகன் – ஆண் சிங்கம் போன்ற ராமன். இடை – நடுவில். ஆறும் ஐம்பொறி – ஐம்பொறிகளும் அடங்கியிருக்கப் பெற்ற. ஆண் எனக் கூறும் – ஆண் என்றுதானே உலகம் சொல்லும். இவ்வுரு – இந்த உன்னுடைய உருவத்தை.]

இனி அனுமன் உள்ளத்திற்குள்ளே உள்ள ஒரு சந்தேகத்தைத் தெளிவிப்பது போல் சீதை பேசுகிறாள் :

தீண்டி னான்எனின்,
  இத்தனை சேண்பகல்
ஈண்டு மோஉயிர்
  மெய்யின்? இமைப்பின்முன்
மாண்டு தீர்வன்என் –
  றேநிலம் வன்கையால்
கீண்டு கொண்டெழுந்(து)
  ஏகினன் கீழ்மையான்.

[தீண்டினான் எனின் – என்னைத் தொட்டிருப்பானானால். இத்தனை சேண் பகல் – இவ்வளவு நெடுங்காலம். ஈண்டுமோ – பொருந்தியிருக்குமோ. மெய்யின் – உடம்பிலே. இமைப்பின் முன் – நொடிப் பொழுதினுள்ளே. வன்கையால் – வலிமையுள்ள கையினால். கீண்டு கொண்டு – பெயர்த்து எடுத்துக் கொண்டு. ஏகினன் – சென்றான்.]

ராவணன் சீதையை நிலத்தோடு பெயர்த்தெடுத்துக் கொண்டு வந்தான் என்று கம்பன், கதையை மாற்றியிருக்கிறானல்லவா? 'வலியத் தொட்டால் நான் உயிர் விடுவேன் என்று எண்ணி நிலத்தோடு கொண்டு வந்தான் ராவணன்' என்கிறாள் சீதை முதன் முதல். அதாவது சீதையின் உயிருக்கே ஆபத்து வந்து விடும் என்று கருதியே ராவணன் தொடவில்லையாம்.

பிறகு ராவணன் தன் உயிருக்கே ஆபத்து வரும் என்று கருதி அவன் தன்னைத் தொடவில்லை என்கிறாள். சாபத்திற்குப் பயந்து தன்னை நிலத்தோடு பெயர்த்தெடுத்து வந்தான் என்கிறாள்.

அந்தச் சாபம் இன்னதென்பதையும் குறிப்பிடுகிறாள் :

மேவு சிந்தையில்
  மாதரை மெய்தொடின்
தேவு வன்றலை
  சிந்துக தீதெனப்
பூவின் வந்த
  புராதன னேபுகல்
சாவம் உண்(டு), என(து)
  ஆருயிர் தந்ததால்.

[மேவு சிந்தையில் - தன்னை அடைய விரும்ப எண்ண மில்லாத. மெய் தொடின் - உடம்பை வலியத் தொடு வானானால். தேவு வல் தலை - தெய்வத் தன்மையுள்ள அந்த வலிய பத்துத் தலை களும். சிந்துக - சிதறி விடுவனவாக. தீது என - அந்தக் குற்றத்திற்காக என்று. பூவின் வந்த புராதனனே - தாமரைப் பூவில் தோன்றிய பழமை யான பிரமன் தானே. புகல் — சொல்லி யுள்ள. சாவம் - சாபம்.]

இந்தச் சாபக் கதையை வால்மீகி முனிவர் யுத்த காண்டத்தில் கூறியுள் ளார்: முனிவர் கதையை ஒருவாறு ஆதாரமாகக் கொண்டே, ராவணன் தொட்டுத் தூக்கி வந்தான் என்னும் முனிவர் கூற்றை மறுக்கின்றது கம்பன் கதைப் போக்கு.

ராவணனுக்குள்ள சாபத்தைச் சீதை தெரிந்து கொண்டது எப்படி என்று ஒரு கேள்வி எழக் கூடுமே; அதற்கும் சமாதானம் வருகிறது சீதை வாக்கிலே:

அன்ன சாபம்
உளதென ஆண்மையான்

மின்னு மோலியன்
மெய்ம்மையன் விடணன்

கன்னி, என்வயின்
வைத்த கருணையாள்,

சொன்ன துண்டு,
துணுக்கம்
அகற்றுவாள்.

[அன்ன சாபம் - அப்படிப்பட்ட சாபம். ஆண்மை யான் - (இங்கே) தர்ம வீரன். மின் னும் மோலியன் மெய்ம்மையன் - சத்தியத்தையே மின்னுகின்ற கிரீட மாகக் கொண்டுள் ளவன். விடணன் கன்னி - விபீஷணன் மகளாகிய திரி ஜடை. துணுக்கம் - அச்சம்.]

சாபத்தைத் திரி ஜடை வாயிலாகத் தெரிந்து கொண் டது எவ்வளவு பொருத்தமா யிருக் கிறது!

விபீஷண புத்திரியா?

திரிஜடை விபீஷண புத்திரி என்ப தைக் கம்பன் இங்கேதான் முதன்முதல் தெரிவிக்கிறான். பிறகு யுத்த காண்டத் திலும் இந்த அபிப்பிராயம் வலியுறுத் தப் படுகிறது. ஆனால் இந்த உறவு வால்மீகி வாக்கிலே வெளிப்படவில்லை.

வால்மீகியோ திரிஜடையைக் கிழவி என்கிறார். அநலை என்னும் ஒருத்தியை விபீஷணனின் மூத்த பெண்ணாக வால் மீகி குறிப்பிடுகிறார். திரிஜடையைக் கிழவியென்று குறிப்பிடும் வால்மீகியின் சீதை அநலையைக் கன்னி (கன்யா) என் கிறாள்.



ஸம்ஸ்கிருதத்தில் கன்யா என்பது சிறு பெண்ணையும், 'நல்ல பால்ய'த்தையும் குறிக்குமென்று ஸ்ரீ வால்மீகி ராமாயண பிரவசனத்தில் தேர்ச்சி பெற்றுள்ள ஸ்ரீ சீதாராம சாஸ்திரியார் கூறியிருப்பதுடன், திரிஜடை விபீஷண புத்திரி அல்ல என்பதே வால்மீகியின் கருத்து என்பதாகவும் மெய்ப்பித்திருக்கிறார்.

இப்படி யெல்லாம் வால்மீகியுடன் மாறுபடும் தமிழ்க் கவிஞனை வால்மீகி 'உரையின்படி'யே பாடியிருக்கிறான் என்று கருதுவது தவறு. அப்படிக் கூறுவதற்கு ஆதாரமாயுள்ள பாயிரச் செய்யுள் பழைய பாட்டல்ல; இடைச் செருகல் என்று ஊகஞ் செய்யச் சான்றுகள் உண்டு.

மறுப்பிற்கு முக்கிய சாட்சி

மேலே குறித்த சாபத்தை மேலும் வற்புறுத்திச் சீதை சொல்லுகிறாள்:

ஆய(து) உண்மையின்,
நானும்,அ தன்றெனின்
மாய்வென் மன்ற;
அறம்வழு வாதென்றும்,
நாய கன்வலி
எண்ணியும், நானுடைத்
தூய்மை காட்டவும்,
இத்துணை தாங்கினேன்.

[ஆயது உண்மையின் – அந்தச் சாபம் உள்ளதானால். அது அன்றெனின் – அந்தச் சாபம் இல்லாவிட்டால். மாய்வென் – இறந்திருப்பேன். மன்ற – நிச்சயமாக. நானுடைத் தூய்மை – நான் உடைமையாகக் கொண்டுள்ள தூய நிலை. இத்துணை – இவ்வளவு காலம். தாங்கினேன் – (இங்கு) தங்கினேன்.]

கடைசியாக் ஒரு சாட்சி, ராவணன் தரையோடு பெயர்த்தெடுத்துக் கொண்டுவந்தான் என்பதற்கு அநுமன் கண்கூடாகக் கண்டுகொள்ளக் கூடிய சாட்சி:

ஆண்டு நின்றும்
அரக்கன் அகழ்ந்து
கொண்(டு)
ஈண்டு வைத்த(து)
இளவல் இயற்றிய
நீண்ட சாலை
யொடும்நிலை நின்றது;
காண்டி ஐய! நின்
மெய்யுணர் கண்களால்.

[ஆண்டு நின்றும் – அந்தத் தண்டகாரணியத்தினின்றும். அகழ்ந்து கொண்டு – பெயர்த்தெடுத்துக் கொண்டு. ஈண்டு – இங்கே இந்த இலங்கையில். இளவல் – தம்பியாகிய லட்சுமணன். நீண்ட சாலையொடு – பெரிய பர்ண சாலையோடு. காண்டி – காண்பாயாக. ஐய – ஐயனே. மெய்யுணர் கண்களால் – உண்மையைக் கண்டறிய வல்ல கண்களால்.]

ராவணன் தொட்டுத் தூக்கி வந்தான் என்னும் வால்மீகி – கதைப்போக்கை இப்படி யெல்லாம் சீதை வாயிலாக மறுத்துரைக்கின்றான் கவி சுந்தர காண்டத்தின் இதயப் பிரதேசத்திலே. இக்காண்டத்தின் இறுதிப் படலத்திலே ராமனுக்குச் சீதையின் நிலைமை கூறும் கட்டத்திலும் அனுமன் வாயிலாகக் கவி தன் கதை மாறுபாட்டை உறுதிப்படுத்துகிறான்.

* * *

ஆனால் இவ்வளவு ஜாக்கிரதையாகக் கதை சொல்லி வரும் கம்பன், ஆரணிய காண்டத்திலே விராதன் சீதையைத் தொட்டுத் தூக்கினான் என்னும் கதைப் போக்கை மட்டும் ஏன் மாற்றி அமைக்கவில்லை? இது ஸ்ரீ வால்மீகி ராமாயண சிரோமணி ஒருவர் என்னைக் கேட்ட கேள்வி.

'ஆணுருவம் கொண்ட ஒரு பூதம்; நன்று தீது நாடிப் பகுத்தறிவில்லாத ஓர் அதம ராட்சஸப் பிராணி. எனவே தீண்டிய தோஷம் இல்லை!' என்று ஒருவிதமாகச் சமாதானம் சொல்லவும் கூடும்: கம்பனுடைய விராத வருணனை இத்தகைய சமாதானத்திற்கு ஒருவாறு இடம் தருகிறது.

எனினும் ஸ்ரீ ராமாயண சிரோமணிகளெல்லாம் இச் சமாதானத்தைக் கொண்டு திருப்தி அடைவார்கள் என்று நினைக்க இயலவில்லை. கிடைக்கும் பழைய ஏடுகளையெல்லாம் வைத்துக் கொண்டு பாட பேதங்களை ஒப்பு நோக்கி ஆராய்வது கம்ப ராமாயண விமர்சகர்களின் கடமையாகும்.

இது நிற்க. 'நீ நினைத்தது காரியமன்று, திரும்புவது தான் காரியம்' என்று அநுமனது காரியப் பேச்சுக்குச் சீதை முற்றுப்புள்ளி வைத்து முடிப்பதை அடுத்த வாரம் பார்க்கலாம்.